# தமிழரசு

16-1-1990 ரூ. 1







# இந்த இதழில் ...


பொங்கற் புதுநாள்-
தமிழர் திருநாள்
—பேரறிஞர் அண்ணா ... 2

பொங்கல் திருநாள்
—முதல்வர் கலைஞர் ... 7

சாது
— பேரறிஞர் அண்ணா ... 10

இதய நோய்த் தடுப்புக்கு
என்றும் உதவும் அரசு ... 14

அடடா, பொங்கல் அமிழ்து
(கவிதை)
—பாவேந்தர் பாரதிதாசன் ... 17

அருந்தமிழ்க் காவலர்
ஆறுமுக நாவலர் ... 19

தமிழ்த் திருநாள்கண்ட
நமச்சிவாயனார் ... 24
—மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன்

கால்நடைச் செல்வம் காத்திட ... 27

தைப்பாவை (கவிதை)
—கவியரசு, கண்ணதாசன் ... 33

புதுத் தை (கவிதை)
—கவிஞர் வாணிதாசன் ... 36

ஏழைகளை
வாழவைக்கும் திட்டம் ... 37

உலக எழுத்தறிவு ஆண்டு ... 41

நூல்நயம் ... 47




## பொங்கல் சிறப்பிதழ்


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

சுக்ல ஆண்டு - தை - 3

மலர் : 20 இதழ் : 14

16 - 1 - 1990


## பொங்கல் வாழ்த்து

அன்பு நெஞ்சங்களே! ...

வணக்கம்.

பொங்கல் புதுநாளில் 'தமிழரசு'
வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும்,
விளம்பரதாரர்களுக்கும்,
தமிழ்ப் பெருமக்களுக்கும்
பொங்கல் வாழ்த்தினைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

-ஆசிரியர்.

# பொங்கற் புதுநாள்!



-பேரறிஞர் அண்ணா


தமிழக மக்கள் தனிச் சிறப்பளித்துக் கொண்டாடி மகிழ்வுபெறும் திருநாள், பொங்கற் புது நாள். எங்கிருந்தோ ஒரு புத்தெழில், இந்த விழாவன்று அரசோச்ச வந்திடும் விந்தை, சிந்தைக்கு இனிப்பளிக்கக் காண்கின்றோம். இன்னல் மிகுந்த வாழ்வில் பின்னிக் கிடந்திடும் நிலையினிலுள்ள மக்களையும், இன்றோர் நாள், கன்னல் கண்டு பேசிட, செந்நெல் குவிந்திருக்க, செவ்வாழை அருகிருக்க, உழைப்பின் பயனாக உருவான பண்டமெல்லாம் நிறைந்திருக்க, மாடு கன்றுகளும் மேனி மினுக்குடனே-பொங்கிடுவது நாங்கள் தந்திடும் பாலன்றோ எனக் கேட்பது போல் உலவிவர, இதயம் பாடிடும் நாள்! இஞ்சியும், மஞ்சளும் இயற்கை தந்த அணிகலன் என்பதனை உணரும் நன்னாள் என்றெண்ணி, மகிழ்வுதனைப் பெற்றுத் திகழ்தல் மக்கள் இயற்கை; பொருத்தமுங்கூட.

நிறைவாழ்வு, கனிச்சுவை போன்றுளது; அதனை நித்தநித்தம் பெற்றிடும் வாய்ப்புக் கிடைக்கப் பெறாதோரும், இன்றோர் நாள், எழில் மாளிகைதனை எட்டிப்பார்த்துக் களிப்படையும் 'இல்லாதான்' போல, இன்னவிதமெல்லாம் இருந்திட்டால், வாழ்வு சிறந்திடும், பயன் மிகுந்திடும், நாடு பொலிவு பெறும், வையகம் கண்டு பெருமைப்படும் என்று எண்ணி மகிழத்தக்க இன்பநாள்.

இந்நாளில், தமிழ் மரபறிந்த எவரும், அறிதுயிலிருந்தபடி அண்டந்தனைக் காக்கும் அரி தங்கும் வைகுந்தம்; ஆடுவதில் வல்லவர் யார்; அறிந்திடுவோம் வந்திடு!'' என்று உமைதனை அழைத்து, மானாட-மழுவாட முக்திக்கு வழிதேடும் பக்தர்கள் மனமாட ஆடிடும் சிவனாரின் கைலையும் இவளழகா- அவளழகா? எவள் இன்று எம்முனிவன் தவம் கலைக்க? என்று தேவர் பேசிப் பொழுதோட்டும் இந்திராபுரியும், பிறவும்பற்றிப் பேசிடுவதுமில்லை, எண்ணமும் கொள்வதில்லை.

தாள ஒலி அல்ல. தையலரின் சிலம்பு இசைக்கும் ஒளிதன்னோடு போட்டியிட்டு, கட்டழகி பெற்றெடுத்த இன்பவடிவத்தை எடுத்தணைத்து, முத்தமிடும் இளைஞன் எழுப்பிவிடும் இச்சொலிக்கும் போட்டி எழ, கண்டு கருத்தறிந்து பண்டு நடந்ததனை எண்ணி எண்ணிப் பாட்டன் சிரித்திட, இடையே விக்கல், இருமல் கிளப்பிவிடும் ஒலியும், இன்னோரன்ன ஒலியே இசையாகிடக் கூண்கின்றோம் இத்திருநாளில்.

இந்த யுகந்தனிலே, இந்தத் தேசந்தன்னில், இன்ன குலத்தினிலே அவதரித்த மன்னவனும், அவனைக் கெடுக்கவந்த அசுரனும் போரிட்ட போது மன்னவன் முற்பிறப்பில் மாதவமும் செய்தான், எனவே, அன்னவனை ரட்சித்து, அசுரனைக் கொன்றிடுதல் முறை என்று, திருமாலும் 'சக்கரத்தை' அனுப்பி வைக்க, வந்தேன்! வந்தேன்! என்று துந்துபி என முழக்கி வந்தது காண் திகிரி, அழிந்தான் அசுரன்; அந்தநாள், இந்நாள்; பண்டிகைநாள்! இந்நாளில், பாகும் பருப்பும் பாலினிற் பெய்து பக்குவமாய்ச் சமைத்து சக்கர வடிவமாக்கி, உண்டு உருசி பெறுவதுடன் உத்தமர்க்குத் 'தானமாக'த் தருவார்கள், அடுத்த பிறவியிலே அரசபோகம் பெறுவார்கள், அத்திரி அருளியது ஆதிக்கிரந்தமொன்று, அதிலிருந்து பிரித்தெழுதி அளித்திட்டார் மாமுனிவர், அவர் வழி



# தமிழர் திருநாள்!

யில் வந்தவரே இன்று புராணம் படிப்பவரும், என்றெல்லாம் கதைத்திடும் நாள் அல்ல. வலிந்து சிலர் இதற்கும் கதை கூறமுனைந்தாலும், எவர்க் கும் அஃது இனிப்பதில்லை; நெஞ்சில் புகுவதில்லை; இஃது பொங்கற் புதுநாள்! தமிழர் திருநாள்;அறுவடை விழா! உழைப்பின் பெரு மையை உணர்ந்து நடத்தப்படும் நன்றி அறிவிப்பு



விழா! என்ற இந்த எண்ணமே மேலோங்கி நிற் கிறது; பெருமிதம் தருகிறது; மகிழ்ச்சி வழிகிறது; அகமும் முகமும் மலருகிறது; வாழ்வின் பொலிவு துலங்கித் தெரிகிறது.

இந்த உலகத்தின் எழில் யாவும் பொய்யல்ல, மெய்! மெய்! எனும் உணர்வும், அந்த எழிலினை யும் பயன்தனையும் நுகர்ந்திடவும், வளர்த்திடவும் முனைதல் மாந்தர் கடன் என்ற மெய்யறிவும், அந்தக் கடமையினைச் செம்மையாய்ச் செய்து முடிக்க ஆற்றல் மிகவேண்டும்-அவ்வாற்றல், கூட்டு முயற்சியினால் மிகுந்த சிறப்பெய்தும் என்றதோர் நல்லறிவும், இருள் நீங்கி ஒளி காண் போர் இதயம் மலராகி இன்புற்றிருப்பதுபோல், நவ்வாழ்வுதனைக் குலைக்கும் நச்சரவு போன்ற நினைப்புகளும், நிலைமைகளும், நிகண்டுகளும், அமைப்புகளும், நீடித்திருக்கவிடல் நன்றல்ல, நலம் மாய்க்கும் என்பதறிந்து, அறிவுக் கதிரினையே எங்கெங்கும் பரவச் செய்து எல்லோரும் இன்



புற்று வாழ்ந்திடலே இயற்கை நீதி எனக்கொண்டு பணிபுரியும் ஆர்வமும் பெற்றிடப் பயன்படும் இந்தப் பொங்கற் புதுநாள்.

இயற்கைச் செல்வங்கள் என்னென்ன இங் குண்டு. அவை தம்மைப் புத்துலக நுண்ணறிவால் மேலும் பயன் அளிக்கும் விதமாக, திருத்தி அமைத் திட என்னென்ன முறை உண்டு என்பதெல்லாம்


## அகமும் முகமும் மலருகிறது

## வாழ்வின் பொலிவு

## துலங்கித் தெரிகிறது.

எண்ணி எண்ணி மகிழ்ந்திடலாம். இந்நாள் நமக் களிக்கும் நற்கருத்தைப் புரிந்து கொண்டால், புனலாடிப் பொன்னார் இழை அணிந்து பொட் டிட்டுப் பூமுடித்து, பாற் பொங்கல் சமைத்து அதில் பாகுகலந்து, பாளைச் சிரிப்புடனே பரிவுமிக்காள் தந்திட, சுவைத்திட இதழிருக்க வேறு தரும் விந்தைதான் ஏதுக்கோ என்று கேட் டிட இயலாமல்,குறும்புப் பார்வையினால் அவன் கூற, பெற்றோர் அதுகண்டு பேருவகைதான் கொள்ள, இல்லமுள்ளார் எல்லோரும் இன்புற்று இருந்திடுதல் பொங்கற் புதுநாளின் பாங்கு; மறுக்க வில்லை; ஆனால் முழுப் பாங்கு என்றதனை மொழிந்திடமாட்டேன் நான்; தித்திக்கும் சுவை யுடனே, சிந்திக்கவும் வைக்கும் எண்ணங்கள் பற்பலவும் பொங்கி வருவதுதான் இந்நாளின் தனிச்சிறப்பு. முழுப்பாங்கு. மலரின் எழில் கண்டு மகிழ்வது மட்டும் போதாது, மணம் பெறவேண்டுமன்றோ! அதுபோன்றே பொங்கற் புதுநாளன்று மனைதொறும் மனைதொறும் காணப் படும் கவர்ச்சிமிகு கோலம்-புறத்தோற்றம்- கண் ணுக்கு விருந்தாகிறது. ஆனால் அதுமட்டும் போதாது; கருத்துக்கும் விருந்து வேண்டுமன்றோ! உளது; உணர்பவர்களுக்கு உணர்பவர்களே பொங்கற் புதுநாளின் முழுப்பயனையும் பெற்றவராவர். உடன்பிறந்தோரே; நீவிர், அந்நன்னோக்கத்துடன் இத்திருநாளின் தன்மையினை உணர்ந்து பயன் பெற வேண்டுமெனப் பெரிதும் விழைகின்றேன்.

*(1968 உலகத் தமிழ் மாநாடு விழா மலரிலிருந்து)*



# வரலாற்றுப் புகழ்கொண்ட வள்ளுவர் கோட்டம்

## முதல்வர் கலைஞர்

பூம்புகார் உருவாக்கியதும், பாஞ்சாலங் குரிச்சி கண்டதும், புதிய எழுச்சி தமிழுக்குக் கிடைப்பதும் உணர்ந்த நல்லோர் சிலர், மயிலாப் பூர் திருவள்ளுவர் ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற முறையீடொன்றைத் தந்தனர் என்னிடம்!

மறுநாளே நானும் அறநிலைய அமைச்சர் கண்ணப்பனும் மயிலைக்குச் சென்றோம். கோயி லைப் புதுப்பிக்கத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது, அதற்கென கருத்துரை வழங்கிடக் குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. இதற்கிடையே அந்தக் கோயிலையன்னியில் நகரின் நடுப்பகுதியில் கோட்டம் ஒன்று அமைத்தால் என்ன என்ற ஆசையும் தோன்றியது. அதுபற்றி விவாதித் தோம். பெரிய அளவில் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாக அந்தக் கோட்டம் அமைய வேண்டு மென விரும்பினோம்.

பூம்புகார்க் கலைக்கூடப் பணிகளை முன் னின்று நடத்திய சிற்பி, கணபதி ஸ்தபதியாரிடம் கோட்டம் பற்றிய விவாத அரங்குகளைத் தொடர்ந்து நடத்தினோம்.

கோட்டம் எப்படி அமைந்திட வேண்டும், வள்ளுவர் சிலை இருக்குமிடம் எப்படி அமைந் திட வேண்டும் என்பதற்கான ''கோணல் மாணல்'' கோட்டுச் சித்திரங்களை நானே வரைந்து காட்டினேன்.

திருவாரூர் தேர்போல ஒருபகுதி அமைய வேண்டும். கலையரங்கம் ஒன்று இலக்கிய விழாக்கள் நடத்திட மிகப் பெரும் அளவில் உருவாக்க வேண்டும். திருக்குறள் முதலிய தமிழ்ப் பனுவல்களை ஆய்ந்திடும் ஆராய்ச்சி மன்ற மொன்றும் அங்கே இடம்பெற வேண்டும், குறளுக்கெனவே தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற ஐந்தாறு பெரும் புலவர்கள் (கிறிஸ்துவ ஆலயத்து பாதிரிமார்களைப் போல) வள்ளுவர் கோட்டத்திலேயே இருந்து குறள் பரப்பும் தூய்மைப் பணி ஆற்றிட வேண்டும். உலகில் எந்த நாட்டிலிருந்து வருகின்றவராயினும் இந்தக் கோட்டத்திற்கு வந்து பயன் பெற்றுத் திரும்பிட வேண்டும். குறள் பரவிடும் எளிமை யான வழிகளைக் கற்றுத் தந்திட வேண்டும். எல்லாக் குறட்பாக்களும் கல்லில் செதுக்கிப்

பதிப்பிக்கப்பட வேண்டும். தேரில் வள்ளுவர் சிலை விளங்கிட வேண்டும். கலையரங்கில் தொல்காப்பியரும், அதங்கோட்டாசானும் சிலை வடிவில் அமைக்கப்படவேண்டும். இத்தனை கருத்துக்களையும் எடுத்துரைத்தோம்.

நான் வரைந்து காட்டிய வள்ளுவர் கோட்ட அமைப்புச்சித்திரம் ''கோணல் மாணல்'' கோடுகளாக இருந்தாலும், அடிப்படை எண்ணத்தைப் புரிந்து கொண்டு அதனைத் திருத்தியமைத்து சிற்பிகளும், அரசு அதிகாரிகளும் வேலைகளைத் தொடங்கினர். இடையில் பணிகள் விரைவில் முடிவுற வேண்டி ஸ்தபதியார் எஸ்.கே. ஆச்சார் அவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டார்! அவர் தான் குமரிமுனையில் விவேகானந்தர் மண்டபத்தை வியக்கத்தக்க வண்ணம் வடித்துத் தந்தவர்.

குமரி முனையில் கோயில் எழுப்பிய சிற்பியும், காவிரி கடலோடு கலக்குமிடத்தில் பூம்புகார் எழுப்பிய சிற்பியும், சேர்ந்து வழங்கும் சிறப்புமிகு கோட்டம்தான் சீர்சால் வள்ளுவர் கோட்டம்!

சிற்பக் கலைக்கு உயிரூட்டும் கழக அரசை அந்த இரு சிற்பிகளுமே பெரிதும் பாராட்டி உள்ளனர்.

''எத்தனையோ அற்புத சிற்பங்கள் இருக்கலாம்! ஆனால் ஒரு பெரிய கதையையே தொடர்ச்சியாக சிற்பங்களில் பூம்புகாரில் வடிக்கச் செய்த அரசு, இந்த அரசுதான்!'' என்று கழக அரசைக் கணபதி ஸ்தபதி பாராட்டினார்; ''பூம்புகார்ப் பெருந்தச்சன்'' என்ற விருதினை மாமல்லபுரத்தில் எனக்கு சிற்பிகள் வழங்கிய விழாவில்!

''பழைய காலத்தில் எத்தனையோ மன்னர்கள் கலையைப் பேணி வந்திருக்கிறார்கள். கோயில்களையும் மண்டபங்களையும் கட்டும்படி சிற்பிகளை அவர்கள் தூண்டியிருக்கிறார்களே தவிர, யாரும் தனது வாழ்நாளில் இப்படி ஒரு கல் தேரை பிரம்மாண்டமாக உருவாக்கும்படி கூறியதில்லை''

—என்று ஸ்தபதி எஸ்.கே. ஆச்சார் ஒரு பத்திரிகைப் பேட்டியில் கருத்து வெளியிட்டார்.

நூற்றுக்கணக்கான சிற்பிகளுக்கும் ஏறத்தாழ ஆயிரம் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு அளித்த திட்டங்கள்தான் இவைகள்! அதே நேரத்தில் தமிழ் மொழியின் மேன்மையை - கலாச்சார மாண்பை நிலை நிறுத்தும் பணியுமாகும்!


இந்தியா ஒரே நாடு! ஒருமைப்பாட்டு உணர்வை வளர்ப்போம்! என்று கூறுகிற அதே நேரத்தில், கலாச்சாரங்களைப் போட்டுக் குழப்ப வேண்டும் என்று யாரும் வாதிட இயலாது!


கலாச்சார உறவுகள் தேவை! வளர்க்கப்பட வேண்டியவை! அதற்காக எல்லாவற்றையும் சேர்த்து ''அவியல் கலாச்சாரம்'' ஒன்றைச்சமைத்திடக் கூடாது! முடியாததுங்கூட!

இரண்டு நாட்களுக்கு முன்பு தமிழ் ஆண்டுப் பிறப்பு கொண்டாடினோம்! அதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்பு, தெலுங்கு வருடப் பிறப்பு கொண்டாடப்பட்டது!

தமிழ்நாட்டில் உள்ள தெலுங்கரும், ஆந்திரத்தில் உள்ள தமிழரும், தங்கள் தங்களுக்குரிய புத்தாண்டுகளைத்தான் கொண்டாடியிருக்கிறார்கள்.

எனவே, இந்தியா ஒரே நாடு என்பது ஒற்றுமைக்கு - ஒருமைப்பாட்டுக்கு - பாதுகாப்புக்கு - இப்படிப் பல நன்மைகளுக்காக நாம் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கை! அதற்காக அந்தந்தப் பகுதி மக்களுக்குரிய கலை, இலக்கியம், மொழி, பண்பாடு, கலாச்சாரம் இவைகளையெல்லாம் விட்டுவிட வேண்டுமென்று கருதி விடக்கூடாது.





தொன்மை வாய்ந்த மொழி, தமிழ் மொழி! அதங்கோட்டாசானிடம் மாணவராக இருந்தவர் தொல்காப்பியர். அவர் காலத்திலே இலக்கணம் எழுதப்பட்டது என்றாலும், அதற்கு முன்பு ஒரு ஐயாயிரம் ஆண்டுகளாவது தமிழ்மொழி மெல்ல மெல்ல பண்படுத்தப்பட்டிருந்தால்தான், அதற்குத் தொல்காப்பியர் இலக்கணம் கண்டிருக்க முடியும்.

தொல்காப்பியர் காலமே மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்கிறார்கள். அதற்கு முன்பு ஐயாயிரம் ஆண்டு வளர்ச்சி, தமிழுக்கு! ஆக எண்ணாயிரம் ஆண்டுக்கால வரலாறு படைத்த பழம் பெரும் மொழி தமிழ் மொழி.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழுக்குக் கிடைத்த கருவூலம் திருக்குறள்!

நூல்களின் தன்மை பற்றிக் கூறவந்த ஆங்கில அறிஞன் ஜான்சன், ''வாழ்க்கை அறிவு புகட்டாத நூல்கள் பயனற்றவை! வாழும் கலையைத் தவிர வேறு எதைக் கற்பிக்க நூல்கள் இருக்கின்றன?'' என்று கேட்கிறான்.

அந்த அடிப்படையில் நோக்கினால், எந்த வகையில் வாழ்ந்தால் வாழ்வு இனியதாக, எழிலுடையதாக, பண்புடையதாக, பயனுடையதாக இருக்குமென்பதை வலியுறுத்திக் கூறும் உயர் தனிப் பெருநூல் திருக்குறளாகும்.

நோபிள் பரிசுபெற்ற அறிஞர் ஆல்பர்ட் சுவைட்சர், ''இந்தியக் கருத்தும் அதன் வளர்ச்சியும்'' என்று எழுதியுள்ள ஆராய்ச்சி நூலில்,

**''திருக்குறள், உயர்ந்த - தலைசிறந்த அறங்கள்**
**அடங்கிய ஒப்பற்ற உலக இலக்கியம்''**

என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனால்தானே ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' எனக் கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் எக்காளமிடுகிறார்!

**''தெள்ளு தமிழ் நடை**
**சின்னஞ் சிறிய இரண்டடிகள்**
**அள்ளு தொறுஞ் சுவை**
**உள்ளுந்தொறும் உணர்வாகும் வண்ணம்**
**கொள்ளும் அறம், பொருள்**
**இன்பம் அனைத்தும் கொடுத்த திரு**
**வள்ளுவனைப் பெற்ற**
**தாற் பெற்றதே புகழ் வையகமே!''**

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் பாடுகிறார். வள்ளுவனைப் பெற்றதால் வையகமே புகழ் பெற்றது என அந்தப் பாவேந்தர் பெருமைப்படுகிறார். குறளுக்குப் பெருமை சேர்ப்பதும், குறள்நெறி மங்கியதை உணர்ந்து அதனை மீண்டும் தமிழ் மக்களின் உள்ளத்தில் பதிய வைக்கும் முயற்சியினை மேற்கொள்வதும் நமது கழகத்தினரால் இன்று நேற்று தொடங்கப்பட்ட தொண்டல்ல! சுமார் இருபத்தி எட்டு ஆண்டுகட்கு முன்பு பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முன்னின்று சென்னை நகரத்தில் ''குறள் மாநாடு'' ஒன்றையே மிகச் சிறப்புற நடத்தியிருக்கிறார்கள்.

**''எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு''**

இந்தக் குறள் வழி நின்று தான் பகுத்தறிவு இயக்கமே மலர்ந்தது. அந்த இயக்கத்தின் கொள்கை பரப்பும் பணிக்குக் குறள் ஒரு பெருந்துணை எனில் அது மிகையாகாது.

தமிழின் பெருமையை ஏட்டில், இலக்கியத்தில் மட்டும் வாழ வைக்காமல் புதியதோர் எழுச்சியுடன் வருங்கால முழுமைக்கும் வாழவைக்கப் பூம்புகாரின் பதிப்பெடுத்தோம். கடலில் ஆழ்ந்து போன பூம்புகார் நிலத்தில் விளைந்தது.

பாரதியின் பாட்டாக, பாரதிதாசனின் கவிதையாக, பல்வேறு அறிஞர் பெருமக்களின் உரையாக மொழி பெயர்ப்புக்களாக வடிவு கொண்டிருந்த வள்ளுவருக்கு இதோ, கோட்டம் அமைத்துவிட்டோம். வான் புகழ் கொண்ட தமிழ்நாட்டுக்கு வரலாற்றுப் புகழ் கொண்ட வள்ளுவர் கோட்டம்!

**15.4.76 அன்று முரசொலியில்**
**'கோட்டம் திறக்கப்படுகிறது, குறளோவியம்**
**தீட்டப்படுகிறது' என்ற தலைப்பில்**
**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்**
**தீட்டிய கடிதத்திலிருந்து.**



# பொங்கல் திருநாள்

## முதல்வர் கலைஞர்

'மா நிலத்து மாந்தரெல்லாம்
மா, பலா, வாழையென்னும் முக்கனியின்
சுவையினூடே
தித்திப்புப் பொங்கல் தின்றிடவே
வேண்டுமென்று
-எம்
சக்திக்கு ஏற்றவாறு உழைக்கின்றோம்.'

பொங்குக பால் என்று முழங்குகின்றோம்
இந்நாளில்; அது
பசும்பாலா? அல்ல; அல்ல!
பைந்தமிழ்த் தேர்ப்பாகன் தந்த பால்
அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்
அதற்கும் அப்பால்
வேறென்ன பால் பொங்க வேண்டும்?
''கன்னல் கொண்டு வா!'' என்றேன்
சுவைப்பதற்கு -
அவளோ பிள்ளைக்
கனியமுதைத் தூக்கித் தருகின்றாள்;
அதுதான் இன்பம்
''வாங்கி வருக மஞ்சள்'' என்றாள்!
''எதற்காக? அதனை
வழித்திடலாம் உன் முகத்தில்!'' என்றேன்.
என் வீட்டு மகிழ்ச்சி கண்டு
எதிர் வீட்டார் இஞ்சி தின்னல் ஆகாதென்று
அதனை
வேரோடு பிடுங்கிப் பொங்கல்
வேகின்ற பானையிலே கட்டுதலே
இந்நாட் சிறப்பாம்!
முட்டுகின்ற மாட்டுக்கும் பொங்கல் உண்டு;
மாடு பிடிக்கத் தோள்
தட்டுகின்ற வீரர்க்கும் பொங்கல் உண்டு.
காளைதனை வென்றவனே எனக்கேற்ற காளை
எனப்
பாளைநகைப் பாவையவள் பகர்ந்ததெலாம் -
பழைய
நாளை நினைப்பூட்டும் இலக்கியமாம்.
ஒளி வரவால் இருள் மறையும்;
உளி வரைந்த சிற்பங்கள் பளபளக்கும்;
களி நடன மயில்களெல்லாம் கலாபம் காட்டும்.
தெளிதேன் தருக என இழுத்திடுவான் குஞ்சி;
துளிதேன் தந்துவிட்டுப் பறந்திடுவாள் வஞ்சி!
பொங்கல் நாளில் புதுப்புது இன்பம்
எங்கணும் தோன்ற எழுந்தான் கதிரோன்!
எதையும் அன்பால் அணுகி வென்றிட
உதய சூரியன் உயர்ந்தான் இன்று!
பார்த்தீரோ பசுமை வெள்ளம்
பச்சைப் பாய் விரித்தது போல் காட்சி
என்னே!
சிந்துபாடும் சிறுநதியின் சிரிப்பொலி கேள்!
சீறிவரும் வனவேங்கைக் காட்டாற்றுத் தண்ணீர்
மீறி வர வொண்ணுமோ அணைகள் தாண்டி!
கடன் பெற்று வேளாண்மை புரிகின்ற
முயற்சிக்கெல்லாம்
உடன்பட்டு உறுதுணையாய் நிற்கின்ற
அரசுகாண்க!'

(12.1.1970 அன்று சென்னை
வானொலியில் 'பொங்கல் திருநாள்'
என்ற தலைப்பில் நடைபெற்ற
கவியரங்கத் தலைமையுரையிலிருந்து)



# ஏழை எளியோர்க்கு இலவச வேட்டி, சேலை, அரிசி

தமிழ்நாடு அரசின் சார்பில் மாதவரு மானம் ரூ.201 முதல் ரூ.300 வரை பெறும் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்படுகிறது. இதனால் 31 இலட்சம் குடும்பங்களும், 4 இலட்சம் முதியோர்களும் பயனடைகிறார்கள். ரேஷன் கடைகள் மூலம் அவை வழங்கப்படுகின்றன.

இந்தப் பணி 8.1.90 முதல் நான்கு கட்டமாக நிறைவேற்றப்படுகிறது.

புதிய அரசு சென்ற ஆண்டு தீபாவளிப் பண்டிகையின்பொழுது, மாதவருமானம் ரூ.200 வரை பெறும் 52 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக வேட்டி, சேலை வழங்கியது.

அதைத் தொடர்ந்து-ரூ.201 முதல் ரூ.300 வரை மாதவருமானம் உள்ள ஏழை எளிய குடும்பத்தார்க்குப் பொங்கல் திரு நாளில் இலவச வேட்டி-சேலை வழங்க அரசு முடிவு செய்ததையொட்டி, 8.1.90 முதல் 12.1.90 வரை முதல்கட்டமாக வட ஆர்க் காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்பு வராயர், பெரியார், புதுக்கோட்டை, தஞ்சாவூர், காமராசர், திண்டுக்கல் காயிதே மில்லத், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங் களைச் சேர்ந்த 10 இலட்சம் ஏழைக் குடும் பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப் பட்டன.

இரண்டாவது கட்டமாக பிப்ரவரி 8-ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை சென்னை, மதுரை, நீலகிரி, கோவை, நெல்லை-கட்ட பொம்மன் ஆகிய 5 மாவட்டங்களில் 7 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச, வேட்டி, சேலை வழங்கப்படும்.

மூன்றாவது கட்டமாக மார்ச்சு மாதம் 8-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை செங்கை-அண்ணா, திருச்சி, இராமநாத புரம், தேவர் திருமகன், சிதம்பரனார் ஆகிய 5 மாவட்டங்களில் 7 இலட்சம் ஏழைக் குடும் பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப் படும்.

நான்காவது கட்டமாக ஏப்ரல் 8-ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை சேலம், தர்மபுரி, தென் ஆர்க்காடு ஆகிய 3 மாவட் டங்களில் 7 இலட்சம் ஏழைக் குடும்பங் களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப் படுகிறது.

இதைத் தவிர 4 இலட்சம் முதியோர்கள் இலவச வேட்டி, சேலை பெறுகின்றனர்.

முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெற்றுக் கொண்டிருப் போர், அந்தந்த மாவட்டங்களில் மேலே குறிப்பிட்ட தேதிகளில் ரேஷன் கடைகள் மூலமாக இலவச வேட்டி, சேலை பெற்றுக் கொள்ளலாம்.

### இலவச அரிசி

இது மட்டுமல்லாமல் - பொங்கல் திரு நாளையொட்டி 83 இலட்சம் ஏழைக் குடும் பங்களுக்குத் தலா 5 கிலோ இலவச அரிசி யும் வழங்கப்பட்டது.




## பட்டை தீட்டிய வைரம்

வைரத்தைப் பட்டை தீட்டத் தீட்ட அதனுள் பல வண்ணங்கள் தெரிவது போல், திருக்குறளை ஆராய, ஆராய, அதில் பல புத்தம் புதிய அருமையான கருத்துக்கள் புலப்படும்.

## பேச்சினால் அல்ல

திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம்; அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்க வர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல - செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.



# வள்ளுவரின் குறள்

"அறிவினால் உய்த்துணர்ந்து, ஒப்புக் கொள்ளக் கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப, இணைந்திருக்கக் கூடியனவும், ஆன கருத்துக்களைக் கொண்டு இயங்குகிறது வள்ளுவரின் குறள்."

"மனித சமுதாயத்திற்கே நல்வழி காட்டி, நன்னெறி ஊட்டி, நற்பண்புகளையும் ஒழுக்கங் களையும் கற்பிக்கும் வகையில் எழுதப்பட்ட நூல்தான் திருக்குறள். எனவேதான் எல்லா மக்களும், எல்லா மதத்தவரும், ''எங்கள் குறள்'' ''எங்கள் மதக் கருத்தை ஒப்புக்கொள்ளும் குறள்'' என்றெல்லாம் அதைப் போற்றி வரு கிறார்கள்."

"மூடநம்பிக்கை யொழிந்து, அறிவு செம்மைப் பட திருக்குறள் செம்மையான வழிவகுத்துக் கொடுக்கும். குறள் கருத்துக்கள் நன்கு நாடெங் கும் பரப்பப்படுதல் வேண்டும். கல்வி என்றாலே 'திருக்குறள் கல்வி', அறிவு என்றாலே 'திருக்குறள் அறிவு' என்றுதான் கருதப்பட வேண்டியுள்ளது."

—தந்தை பெரியார்

# சிலப்பதிகாரம் தரும் செய்தி



| | |
|---|---|
| கரியல் | இறஞ்சி |
| பேடகம் | வெண்பொத்தி |
| பரியட்டக்காசு | செம்பொத்தி |
| வேதங்கம் | பணிப்பொத்தி |
| புங்கர்காழகம் | கோகிலம் |
| சில்லிகை | பீதகம் |
| தூரியம் | பச்சிலை |
| பங்கம் | அரத்தம் |
| தத்தியம் | துண்டுகில் |
| வண்ணடை | சுண்ணம் |
| கவற்றுமடி | வடகம் |
| நூல்யாப்பு | பஞ்சு |
| தருக்கு | இரட்டு |
| தேவாங்கு | பாடகம் |
| பொன்னெழுத்து | கோங்கலர் |
| குச்சரி | கோபம் |
| தேவகிரி | சித்திரக்கம்மி |
| காத தூலம் | குருதி |

''என்ன சொற்கள் இவை? பழக்கத்தில் உள்ள வையாய்க் காணோமே! பொருளும் விளங்க வில்லையே'' என்று யோசிக்கிறீர்கள் அல்லவா? - அர்த்தமற்ற சொற்களல்ல அவை.

| | |
|---|---|
| சாடின் | பேடா |
| பாப்ளின் | ப்யூசி சில்க் |

இவை புரிகின்றன அல்லவா? இவை போன்று தான் அவைகளும்! துணி வகைகளின் பெயர்கள்! நாகரிக உலகிலே நடமாடுபவர்களின் நாவில் நர்த்தனமாடும் சொற்கள்! வெளிநாட்டுத் துணி வகைகளின் சொற்கள்!

அவை போன்றவைதான், முன்னாலே நாம் பொறித்திருப்பவை - ஆடைகளின் பெயர்கள்!

நம் நாட்டு ஆடைகள் பட்டாலானவை - பாண்டியனின் கொலு மண்டபத்தை அலங் கரித்தன - ரோம் நாடு வரை சென்றன.

இவ்வளவு வகையான பட்டாடைகளை இங்கு, தமிழர்கள் முன்பு தயாரித்தனர். கட்டுக்கதையல்ல- இட்டுக் கட்டியதல்ல - இலக்கிய ஆதாரம் - சிலப்பதிகாரத்திலே காணலாம் - இந்தத் தொழி லின் சிறப்பையும், தமிழரின் நாகரிகத்தையும், வாணிபத்தையும் விளக்கும் இச்செய்தியை!

—பேரறிஞர் அண்ணா

# சாது



**வேலாயுதம்**

'பரமசாது-நம்ம தோட்டக்காரன்; கோபம் துளிகூடக் கிடையாது. எனக்குச் சற்று முன் கோபம் வருமல்லவா - அதனாலே, ஒவ்வொரு நாள் அவனைக் கண்டபடி திட்டிவிடுவேன்-'கழுதே; நாயே; கட்டிவைத்து உதைக்கிறேன் பார்' என்றெல்லாம்; கோபிக்கவேமாட்டான்-அவ்வளவு சாது; தலையைக் குனிந்தபடி நிற்பான்; எதிர்த்து ஒரு பேச்சும் பேசவேமாட்டான்.

''ஒருநாள், என்னவோ மனக்கஷ்டம் எனக்கு; அந்தச் சமயத்திலே அவன், ஏதோ தவறு செய்து விட்டான்; அதனாலே வந்த கோபத்தில், எதிரே இருந்த என் செருப்பைத் தூக்கி வீசினேன்-பயல் மீது; நல்ல வேளை-அவன்மீது படவில்லை, அப்போதுகூட அவன் கோபித்துக் கொள்ளவில்லை; கீழே விழுந்த செருப்பை எடுத்துவந்து-பழையபடி-இருந்த இடத்திலேயே வைத்துவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் சென்றான். அவ்வளவு சாது-என் தோட்டக்காரன். நான் பார்த்ததேயில்லை-அப்படிப்பட்ட அபூர்வமான குணமுள்ளவனை- பரம சாது!''

**வள்ளி**

''பூமாதேவி பொறுமைசாலி'' என்று சொலகிறார்களே-அது தப்பு! நம்ம பொட்டைக்கண்ணி போலச் சாது இந்தப் பூலோகத்திலே வேறு யாரும் இருக்கமாட்டார்கள்!

**பலரது மனப் பண்புகளையும் அறிந்து ஆய்ந்தால் தான், அந்தத் திறன் கைவரும்! மனப்பண்புகளை அண்ணா எப்படி எப்படி யெல்லாம் படம் பிடித்தார் என்பதற்கு இந்த எழுத்தோவியம் ஓர் எடுத்துக்காட்டு!**

# பேரறிஞர் அண்ணா

அவளுடைய புருஷன் அவளைப் படுத்துகிற பாடு-அடடா-தெய்வங்கூடச் சகிக்காது! நின்னா உதை-குனிந்தா குத்து! ஒரு காரணமுமில்லாமல் சண்டை போட்டு-அவளை நாயைப் பேசுகிற மாதிரியாப் பேசி-கையிலே கிடைச்சதை எடுத்து வீசி நாசம் செய்கிறான்! 'குழம்பிலே ஏண்டி காய் இல்லை; காயிலே ஏண்டி ருசி இல்லை; மாடத்திலே ஏண்டி காசு இல்லை; பிள்ளை ஏண்டி தூங்கவில்லை; பேசினா ஏண்டி பதிலில்லை' என்று-இப்படி விநாடிக்கு விநாடி 'டி' போட்டுத் திட்டியபடி இருப்பான்!

இவ்வளவு உதையையும் பட்டுக்கொண்டு அந்தப் புண்ணியவதி-பாவம்-வாய்திறந்து ஒரு வார்த்தை பேசமாட்டா பதிலுக்கு! அவ்வளவு சாது-அவ்வளவு பொறுமைசாலி! நான் எவ்வளவோ பேரைப் பார்த்திருக்கிறேன்- அவளைப் போல் அடக்க ஒடுக்கமானவளைக் கண்டதே இல்லை! கணவன் கோணல் சேட்டை ஆடுகிறதைப் பொறுத்துக்கொண்டு, எப்படியோ குடித்தனம் செய்கிறா அந்தப் புண்ணியவதி! சாது-பரமசாது!''

**செல்லி**

''பொம்பளையா இவ-பஜாரி! கிணற்றுக்கு வந்தாப்போதும்-ஒரேஆர்ப்பாட்டம்! ஒரு சொல்லு சொல்லுவதற்குள்ளே 'ஓகோ'ன்னு கூவிக்கொண்டு, சண்டைக்குக் கிளம்பிவிடுகிறா ஒரு காரணமும் இல்லாவிட்டாக்கூட சண்டை போடுகிறா!

''அப்பப்பா! என்னென்னதான் பேசறா தெரியுமா! சபிச்சிக் கொட்டறா! வாயிலே வரத்தகாத பேச்செல்லாம் பேசுவா! பேச்சோடு விடுகிறாளா - குடத்தாலே இடிப்பா! கூந்தலைப் பிடித்து இழுக்கிறா! சில சமயம், அடிக்கவே வந்து விடுகிறா!

''அடங்காப் பிடாரி-வம்புச் சண்டைக்காரி-வாய்க் கொழுப்புக்காரி! அவ கிணற்றண்டை வருகிறான்னு தெரிந்தாலே, நான் போகமாட்டேன்-'செ! அந்த வாயாடி போக்கிரிக் கழுதை போய்த் தொலைக்கட்டும்'னு வீட்டிலேயே இருப்பேன்!

'அப்பப்பா! நானும் எத்தனையோ பொம்பளைகளைப் பார்த்தேண்டியம்மா-இவளைப் போல் பஜாரியைக் கண்டதுமில்லை! சனியன்-ஒழியுதாம் புருஷன் வீட்டுக்கு-நாளைக்கு! போய்த் தொலையட்டும்! நம் ஊர் சேமப்படும்! கிணற்றுப்பக்கம் தாராளமாகப் போய் வரலாம்-இனி!''

'பரமசாது' என்று எசமானரால் பாராட்டப்பட்ட தோட்டக்காரனேதான், 'நின்னா உதை-குனிந்தா குத்து' கொடுக்கும் கணவன்!

அந்தக் கணவனுடைய கோணல் சேட்டைகளைப் பொறுத்துக் கொண்டு, 'பூமாதேவியை விடச் சாது'வாக இருக்கும் பொட்டைக் கண்ணிதான், கிணற்றருகே போனால் வாயாடி வம்புச் சண்டை பிடிக்கும் பஜாரி!

பரமசாது-கொடிய கணவனானதும், அடக்கமான மனைவி-அடங்காப்பிடாரியானதும் ஏன்!

எசமானரிடம் அவன் படும் கொடுமைகள், அந்தப் பரம சாதுவின் மனத்திலே கிளப்பிவிடும் கோபம் இருக்கிறதே-அங்கு அவர் எதிரே அடங்கிக் கிடக்கிறது! வீட்டில்-அபலையின் முன்னே வெளி வருகிறது! பரம சாது, கோபம், தலைக்கேறிய கொடியவனாகிறான்!

அவனுடைய கொடுமைகளைச் சகித்துக் கொண்டு பரம சாதுவாக-பொறுமைசாலியாக இருக்கும் அந்த மனைவியின் மனத்திலே அந்தச் சமயங்களிலே மூண்டுவரும் கோபம் அப்போது அடங்கிக் கிடக்கிறது-புற்றுக்குள் இருக்கும் பாம்பு போல! தாய் வீட்டில் - கிணற்றருகே வேறு பெண்கள் எதிரே-அந்தப் பாம்பு படமெடுத்தாடுகிறது! அப்போது பரம சாது-பஜாரியாகிறாள்!

வேலை செய்யுமிடத்திலே சாது! வீட்டிலே கோபக்காரன்!

புருஷன் எதிரிலே பொறுமைசாலி! அவளே பிறகு பஜாரி-வேறு பெண்கள் எதிரில்!

சேலம் 'ஒகேனக்கல்' அருகில், ஆடு தாண்டும் அளவுள்ள காவிரி, பிறகு அகண்ட காவிரியாகிறதே-வேறு மாவட்டத்தில்; அதுபோல, இடபேதம், இயல்பு பேதத்துக்குள்ள பல காரணங்களிலே ஒன்று!

# காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள்

**மா**னுட பண்பியல்புகளுக்கு ஓர் உறைவிட மாய் - வாழ்க்கை வழி, நெறி முறைகளுக்கான வழிகாட்டியாய் - அமைந்துள்ளது நமது திருக் குறள். ''காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள் அன்றி உலகினில் வேறு ஏது?'' என்றும் நாம் கேட்டிடலாம், எவரைப் பார்த்தும். உலகெங்கணும் பறை சாற்றிடலாம், அஞ்சிடத் தேவையில்லை.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'- நமது நாடு. எதனால் இப்படிக் கூறினார் பாரதியார். அந்த வள்ளுவர், திருக்குறள் என்ற பொய்யாமொழி யினை - வாழ்க்கை நெறிக் கோட்பாட்டு மறை தனைத் தீட்டியதால்தான்.

—பேரறிஞர் அண்ணா

ஓர் இடத்திலே, கோபத்தைக் காட்ட முடிவ தில்லை - ஆனால், கோபமே ஏற்படவில்லை என்று பொருள் அல்ல! அது பிறகு, கொதித்துக் கிளம்புகிறது-வேறோர் இடத்தில்!

தோட்டக்காரன், பரம சாதுவாகத்தான் இருந்து தீர வேண்டி நேரிடுகிறது! இடம் அப்படி!

பொட்டைக் கண்ணி, பொறுமைசாலியாகத் தான் இருக்க வேண்டி நேரிடுகிறது - புருஷன் எதிரில்!

வீட்டில் அவன், தன் கோபத்தைக் காட்ட முடிகிறது. தாராளமாக! ஆகவே, வேலை செய்யு மிடத்திலே கட்டிப் போட்டிருந்த கோபம், கட்டு களை அறுத்துக் கொண்டு காட்டு மிருகம்போல் ஆக்கிவிடுகிறது-பரம சாதுவை! அவள் நிலையும் அதுதான்-தாய் வீட்டிலே-கிணற்றருகே-புருஷன் இல்லாத இடத்திலே!

அவர்கள் மட்டுந்தானா-நாம்? எத்தனையோ சமபவம்-இப்போது நினைவிற்குக் கொண்டு வந்தால் தெரியும்!

பரம சாதுவாக இருப்போம் சில சமயம்- கோபம் கொப்பளித்தெழும் சில சமயம்- இட பேதம், இயல்பைப் பேதப்படுத்தி இருக்கும்!

உளப் பண்பின் நுட்பம் அறிந்தவர்கள் கூறு கின்றனர் - 'ஒரு சமயத்தில், எக்காரணம் கொண்டோ ஏதோ ஓரிடத்தில் மூண்டு- இடபேதம் காரணமாக அடக்கப்பட்ட உணர்ச்சி, (கோபம் மட்டுமல்ல; எந்த உணர்ச்சியுமே) வேறொரு சமயம்-வேறோர் இடத்தில் பல மடங்கு வேகத்துடனும், அளவிலும் வெளிப்படும்' என்று!

குட்டிகளுக்கு அன்போடு பால் கொடுக்கா மலா இருக்கிறது பெண்புலி! மானைப் பிடித்துக் கொன்று இரத்தத்தைப் பெண்புலி குடிக்கும் போது எப்படி இருக்கிறது!

மக்களும் அப்படித்தான்! எனவேதான், 'பரசு ராமன் சாது; பாண்டுரங்கம் கோபக்காரன்; பார்வதி போக்கிரி; பரிமளா சரசி—எனப் பொது வாகக் கூறிவிடுவது முழு உண்மையாகி விடாது' என்று உளப் பண்பு உணர்ந்தோர் கூறுகின்றனர்!

## புதுச் சம்பவம்

''ஏண்டா தடிக் கழுதே! ஏது-கோபம் பிரமாத மாக வருதோ?''

''கோபம் வராதா அய்யா?'' நான் என்ன மாடா-மனுஷனா? எவ்வளவு உழைத்தாலும்-உள் ளன்போடே நடந்தாலும்-உனக்கு ஒரு துளி ஈவு இரக்கம் ஏற்படுதா? நாயைப் பேசுறாப் போல பேசினா-நானும் மனுஷன்தானே-கோபம் வரா மலா இருக்கும்?''

உதைத்தால் தெரியும்-ராஸ்கல்!''

சும்மா இருங்க; உங்களிடம் வேலை செய்ய வந்திருக்கிறேனே தவிர, உதை வாங்க அல்ல! மனுஷாளை மனுஷாளுங்க அடிக்கிறதும், உதைக் கிறதும் தகாதுங்க; பொறுத்துக்கொள்ள வேணும்னு அவசியம் ஒண்ணும் கிடையாதுங்க; மாட்டை அடிச்சாக்கூட, அது முட்ட வரும்; மனுஷன் சும்மா இருக்க வேணும்னு சொன்னா, சரிங்களா?''

டே! நீயா இப்படிப் பேசறே! ஏண்டா-இதெல் லாம், யாரிட்ட போதனை? ஏண்டா-மறுத்து ஒரு பேச்சுப் பேச மாட்டே; அவ்வளவு அடக்க ஒடுக் கமா-சாதுவாக இருந்தவன், இப்படி-ஒரு சொல் சொல்லாதமுன்பு-கோபம் தலைக்கு ஏறி கொக் கரிக்கிறாயே-என்னடா சங்கதி?''

## அந்தச் சங்கதி இது!

''இருப்பது இதுதான்.''

''என்ன கழுதே! கேட்டா, 'இதுதான்'னு கத் தறே! எனக்கு வெண்டைக்கா பிடிக்காதுன்னு உனக்குத் தெரியாதா கழுதே!''

தா! சும்மா கழுதே மேய்க்காதே!''

''அடி, நாயே! என்னடி-என்னமோ எதிர்த்து எதிர்த்துப் பேசறே!''

''உள்ளதைச் சொன்னா, 'எதிர்க்கிறது'ன்னு பேரா? நீ, காரணமில்லாமே கண்டபடி பேசுவே கல்லா நானு? காலமெல்லாம் இந்தக் கதிதானா எனக்கு? உன் மனசு என்ன-இரும்பா!''

''அடடே! உபதேசம் செய்யக் கத்துக்கிட் டாயா- கழுதே!''

''மறுபடியும், மறுபடியும்...''

''சொன்னா, என்னவாம்! பதில் பேசினே- உதைதான்.''

உதைச்சித்தான் பாரேன்.''

எழுந்தான்-உதைத்தான்; ஆனால், அவன் தான் வீழ்ந்தான்! பொட்டைக்கண்ணி, அந்தக்

காலைப் பலமாகப் பிடித்து ஒரு பக்கம் திருப்பி விட்டாள்!

அதுதான் நடந்த சங்கதி-அவனைச் சிந்திக்க வைத்தது! நெடுநேரம் யோசித்தான்-பலப்பல! புதுப் புதுவிதமாக யோசனை உதித்தது! புது ஆளானான்!

லோயுதத்துக்கு, அந்த சங்கதியும் அதன் சூட்சமும் தெரியாது; அவன் ஆச்சரியப்பட்டான்-'பரமசாது, ஏன் இப்படி எதிர்த்துப் பேசுகிறான்' என்று!

''சரி; வாயை மூடுடி; உனக்குத்தான் பேசத் தெரியும்னு எண்ணமா?''

''பேசண்டி, பேசு; பேயாட்டம்-ஆடண்டி ஆடு.''

''சரி; கிடடி கழுதே முண்டே!''

''யாருடி கழுதே!

''நீதாண்டி நாயே!''

கிணற்றங்கரை அமளி-பொட்டைக் கண்ணியின் ஏக சக்கராதிபத்தியம் உடைந்தது-செல்லியின் எதிர்ப்பால்!

உடைந்தது மட்டுமல்ல-பொட்டைக்கண்ணிக்கும் புதுப் புது எண்ணங்கள் உதித்தன; அதன் விளைவுதான், புருஷனிடம் அவள் எதிரித்துப் பேசியது! அதன் பலன்தான்-அவள் கணவன், தன் சர்வாதிகாரம் சரியக் கண்டது! அதன் தொடர்ச்சிதான்-வேலாயுதம், பழையபடி தோட்டக்காரனை எவ்வளவு கண்டித்தாலும், 'அவன் பரம சாதுவாக இருப்பது இனி நடைபெறாது' என்பதைத் தெரிந்துகொண்டது!

வேலாயுதமும் சிந்திக்கலானான் தோட்டக்காரனைப் போலவே - பொட்டைக்கண்ணி போலவே! அவனும் அவர்களைப் போலவே முறையையும் இயல்பையும் மாற்றிக் கொண்டான்! முன்கோபம் இல்லை!

அதோ, பேசுகிறான் கேளுங்கள்:-

ஏண்டாப்பா--'அடாபுடா'ன்னு கூப்பிடுவானேன்...துரைசாமி! தோட்டத்துக்குத் தண்ணி பூரா பாய்ச்சியாச்சா?''

''ஆச்சிங்க.''

''அப்போ, வீட்டுக்குப் போய்ட்டு வாப்பா.''

''குழம்பிலே, உப்பு குறைவு குப்பி.''

''ஆமாங்க; கவனிக்கலே.''

''கொஞ்சம் போடு.''

அதோ மேல் சட்டியிலே இருக்கு பாரு; எடுத்துப் போட்டுக்கோ; நான் குழந்தைக்குப் பால் கொடுக்கறேன்.''

''ஆமாம்; நீ இரு; நான் எடுத்துக் கொள்கிறேன்.''

# தமிழின் தனிச் சிறப்பு

## பேரறிஞர் அண்ணா

வாழ்க்கை நெறி முறைகளிலும், நாகரிக நல்வாழ்வு நயத்திலும் மிக மேம்பாடுடன் வாழ்ந்திட்ட பண்டைத் திராவிடர்தம் மொழியாம் தமிழ்மொழி எல்லாம் வல்லதாய், பல்வளமும் பல்கிப் பெருகியதாய், நீண்ட நெடுங்காலந் தொட்டே நிலைபெற்று நீடித்து வழங்கி வருகின்றது என்பது மொழிப் பேரறிஞர் அனைவராலும் போற்றப்படுகின்றது இன்று.

தமிழின் சிறப்பியல்புகளை - செம்மொழிக் கேற்ற சீரிளம் இயல்புகளை மொழிவல்லார் - பலரும் மெத்தவும் மெச்சிடுகின்றனர்.

தமிழ்மொழி காலத்தால் மிக மிகத் தொன்மையானது. இலக்கண இலக்கிய விதிகளையும், வரைமுறைகளையும் செவ்வனே பெற்றுள்ளது. தூயது-தூய்மையானது; துல்லியமாக எண்ணங்களை வெளிப்படுத்திடும் சொல் வளம் மிகவும் படைத்தது. உணர்வுகளை நுட்பமாகவும், நுண்ணியமாகவும், நேர்மையாகவும், நேர்த்தியாகவும் ஊட்டிடும் நயம் மெத்தவும் மிக்கது. எண்ணங்களை, ஏற்பாடுகளை, கொள்கை கோட்பாடுகளை வழுவாமல் பிறழாமல் குறித்துணர்த்திக் கூறிடும் சொல்லாட்சியும் உடைத்தானது.

சூடு, சுவை, சூட்சுமம், மதிநுட்பம் வாய்ந்த குறிப்புரை, விரிவுரை, விளக்கவுரை அத்துணையும் ஆற்றிடவல்ல சொல்லாரம் தமிழ்க்களஞ்சியத்தில் ஏராளம், ஏராளம், மிக மிக ஏராளம்; எடுக்க எடுக்கக் குறையாதது; கொடுக்கக் கொடுக்க மாளாதது நம் தமிழ் மொழியின் வளம் - வல்லமை.

மாறி விட்டது சுபாவம்! அளவுக்கு மீறித் தண்ணீர் வந்தால்-ஆற்றிலிருந்து வாய்க்காலில் திருப்பிவிட்டு வெள்ளத்தின் வேகத்தைக் குறைக்கிறோம்மல்லவா! உள்ள உணர்ச்சியும் அப்படித்தான்! அடக்கியே வைத்திருக்க வைத்திருக்க எங்கெங்கோ பாயும்-மேயும்! கட்டுக்குக் கொண்டு வந்து-பக்கம் பாாத்துத் திருப்பி-கொதிப்பு ஏறாதபடி குறைத்து முறைப்படுத்தினால், மோதுதலும் தாக்குதலும் குறையும்.

இது நிகழும்போது தெரிவதில்லை; ஆனால், இந்த இரசாயனம் வெற்றிபெற்று நிலைமை மாறின பிறகு,நாம் கூறிவிடுகிறோம்-சூட்சுமத்தைத் தெரிந்து கொள்ளாமல்-'அவன் நல்லவன்; இவன் நல்லவன்' என்று!

இயல்பு, அவ்விதம்-பொதுவான இலக்கணத்துக்கு உட்படுவதில்லை! இடம்-காலம்-முறை-சம்பவங்கள் - பயிற்சி - மற்றவருடன் கொள்ளும் தொடர்பு- ஆகியவைகளாலே உருவாக்கப்பட்டும், வளர்ந்தும், மாறியும், வேறு உருப் பெற்றும், ஒவ்வொரு வினாடியும் வளருகிறது! அதன் தன்மையை அறுதியிட்டுக் கூறிவிட முடியாது-கூறவும் கூடாது!




# இதயநோய்த் தடுப்புக்கு என்றும் அரசு உதவும்!

"இந்திய இதயநோய் மருத்துவக் கழகமும், மற்றும் இந்திய நெஞ்சு நோய் அறுவை சிகிச்சை நிபுணர்கள் கழகமும் இணைந்து நடத்தும் இந்தக் கூட்டுமாநாட்டில் கலந்து கொள்வது குறித்துப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்திய இதயநோய், மற்றும் நெஞ்சு நோய் மருத்துவ, அறுவை சிகிச்சைத் துறையினர் ஆண்டுதோறும் நடத்தும் மாநாடு இது எனக் கருதுகிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு, சென்னை நகரைத் தேர்ந்தெடுத்திருப்பதே மருத்துவத் துறையில் சென்னை கண்டுள்ள முன்னேற்றங்களை அங்கீகரிப்பதற்கு ஒப்பாகும். சீனா, பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான், சவுதி அரேபியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தெல்லாம்கூட பிரதிநிதிகள் வந்து இம்மாநாட்டில் பங்கேற்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவுக்குள்ளிருந்தும் அயல்நாடுகளிலிருந்தும் வந்துள்ள புகழ்வாய்ந்த பிரதிநிதிகளை உளமார வரவேற்கிறேன்.

நம் நாட்டில் - குறிப்பாகத் தமிழகத்தில், இதயநோய் மருத்துவம், நெஞ்சுநோய் மருத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சியின் தேவை எப்போதோ உணரப்பட்டிருக்கிறது. அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளப் பயிற்சி பெற்ற திறமைசாலிகளான அறுவைச் சிகிச்சை வல்லுனர்கள் உள்ளனர். சென்னையில் அரசினர் பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, இராயப்பேட்டை மருத்துவமனை, குழந்தைகள் மருத்துவமனை ஆகியவற்றிலும், மதுரையிலும் தஞ்சாவூரிலும் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் இதயநோய் சிகிச்சைப் பிரிவு செயல்பட்டுவருகிறது.

சென்னை பொது மருத்துவமனையில் நவீன சாதன வசதிகளுடன்கூடிய, இதயநோய் மருத்துவப் பிரிவு, இந்தியா முழுவதிலுமிருந்து வரும் இதயநோய் மருத்துவர்களுக்குப் பயிற்சியளிக்கும் முன்னோடிப் பயிற்சி நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்த இதயநோய் மருத்துவப் பிரிவில் அண்மையில் அணுத்துறை சிகிச்சை முறையளிக்கும் சாதனம் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

இதயம்-நெஞ்சு நோய் மருத்துவப் பிரிவு (Cardio Thoracic) பிறவியிலேயே ஏற்படும் பரம்பரையான நெஞ்சு நோய்கள் பற்றி சர்வே நடத்துவதுடன், நோயினால் சேதமடைந்துள்ள இதய வால்வுகளை மாற்றியமைக்கும் சிகிச்சையையும் மேற்கொள்கிறது. ஓப்பன் ஹார்ட் சர்ஜரி, கரோனரி பைபாஸ் சர்ஜரி, கரோனரி ஆர்டரி சர்ஜரி ஆகிய அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழகத்திலுள்ள ஏழை மக்களுக்கு, மிக நவீன சிகிச்சை வசதிகள் இலவசமாகக் கிடைக்கின்றன. ஓப்பன் ஹார்ட் சர்ஜரி, மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் அறுவைச் சிகிச்சை, புற்றுநோய்ச் சிகிச்சை முதலியவற்றுக்கான சிகிச்சைகளுக்காக 1989-ஆம் ஆண்டில் சுமார் 106 நோயாளிகளுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவியளித்திருக்கிறோம் என்பதை, இங்கு கூடியுள்ள புகழ் வாய்ந்த வல்லுனர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் 75 பேர் ஓப்பன் ஹார்ட் அறுவைச் சிகிச்சைக்காக உதவி பெற்றவர்கள். பைபாஸ் அறுவைச் சிகிச்சை வசதிகளைப் பெருக்குவதற்காக, இந்த அரசு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

பொது சுகாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காகப் பெருமளவில் மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியிலும், மக்களிடம் நலவாழ்வு பற்றிய அறிவைப் பரப்பி, மூடநம்பிக்கைகளைக் கைவிட்டு அவர்கள் நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சையை மேற்கொள்ளும் மனப்பான்மையை வளர்ப்பது இடம் பெற்றாக வேண்டும்.

தற்போது இந்த அரசு, பள்ளி நலவாழ்வுத் திட்டத்தை அமல்நடத்தி வருகிறது. அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்டுள்ள, இந்த பள்ளி நலவாழ்வுத் திட்டத்தை நலவாழ்வு மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறையினர் இந்த மாநிலத்திலுள்ள சில ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், நகராட்சிகளிலும் அமல்நடத்தி வருகின்றனர். இந்தத் திட்டத்தின்கீழ் 6 வயதிலிருந்து 11 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளும், பின்வரும் குறைபாடுகள் இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கான சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

1. ஊட்டச்சத்துக்குறை 2. கண் பார்வைக் குறைபாடு 3. பற்களின் நிலைமை 4. காசநோய் 5. தொழுநோய் உள்ளிட்ட, தோல் சம்பந்தப்பட்ட நலக் குறைவுகள், 6. சுபாவக் கோளாறு பிரச்சினைகள் 7. உடல்

## இரண்டாம் அட்டை

**பொங்கல் திருநாளை முன்னிட்டு மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த அலங்காநல்லூரில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் ஜல்லிகட்டு காட்சி இரண்டாம் அட்டையை அணி செய்கிறது.**



மற்றும் உளம் சம்பந்தப்பட்ட குறைபாடுகள்.

முதலாம் வகுப்பிலிருந்து 11 வயதாகும்வரை, ஒவ்வொரு மாணவ மாணவியருக்காகவும் தனியாக அட்டைகள் வைத்து உடல்நலம் பற்றிய குறிப்புகள் அதில் பதியப்பட்டு வருகின்றன. அவசியம் என்று தோன்றினால் இந்தத் திட்டத்தின்கீழ் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்படும் மருந்துகளைக் கொடுத்து சிகிச்சையளிக்கப்படுகிறது. விசேஷ கவனிப்புத் தேவைப்படும் குழந்தைகள் தேவைக்கு ஏற்ப, அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

வாதம் சம்பந்தப்பட்ட இதய நோய்கள் பற்றிய பிரச்சினைகள் என்ன என்பது இப்போது தெரிந்துவிட்டிருப்பதால், நமது திட்டத்தில் இது சம்பந்தமாகக் காணப்படும் இடைவெளியை அகற்றியாக வேண்டும். இதற்காகப் பள்ளி நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் மருத்துவ ஊழியர்கள், அவர்களுக்குக் கீழே உள்ள துணை நிலை ஊழியர்கள் ஆகியோருக்குத் தகுந்த பயிற்சியளிக்க வேண்டும்.

வாதம் சம்பந்தப்பட்ட இதய நோய்களால் தாக்கப்படும் வாய்ப்புள்ள குழந்தைகளுக்கு, அது சம்பந்தப்பட்ட பல்வேறு உடற்கூறுகளைக் கண்டறிவதிலும், ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிவதிலும் ஏற்கெனவே நோய் வந்துவிட்டிருந்தால் சிகிச்சையளிப்பதிலும் இவர்களுக்குத் தக்க முறையில் பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

இத்தகைய பயிற்சியளித்தால் மட்டும் போதாது. இந்தத் திட்ட அமலின் செயல்பாட்டையும், பலாபலனையும் தொடர்ந்து கண்காணித்து வந்து மதிப்பீடு செய்யும் ஏற்பாடும் இருந்தாக வேண்டும்.

தமிழகத்திலிருந்து இளம்பிள்ளை வாதத்தை அறவே விரட்டும் பொருட்டு, தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். தொத்து நோய்களிலிருந்து எல்லாக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கான அனைத்துத் தடைக்காப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

ஏழைக் குழந்தைகளுக்கு அவர்கள் சாப்பிடும் உணவுடன் கூட, கூடுதலாக ஊட்டச் சத்துள்ள பொருட்களை வழங்குவதன் மூலம், நோயை எதிர்த்துப் போராடும் திறனை அளிக்கவும், தவிர குழந்தைகளின் பொதுவான உடல்நலனை வளர்க்கவும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இப்போது தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டிய நோய்களின் பட்டியலில், வாதம் சம்பந்தப்பட்ட இதயநோயும் சேர்ந்துவிட்டதால், குழந்தைகளுக்கான நலவாழ்வுத் திட்டம் இன்னமும் அதிக இணக்கமாகவும், பயனுள்ளதாகவும் இருந்தாக வேண்டியுள்ளது.

மக்களின் ஒட்டு மொத்தமான உடல்நலப் பராமரிப்புக்கு வகை செய்யும் விஷயத்தில், அரசாங்கத்தின் முன்புள்ள பணி மகத்தானது என்பதை மாநில அரசு உணர்ந்துள்ளது.

இந்த முயற்சியில், இத்துறையைச் சேர்ந்த வல்லுனர்களின் ஒத்துழைப்பும், மருத்துவத் தொழில் திறனும் அரசுக்குத் ' தேவைப்படுகிறது. மருத்துவப் பணியில் உங்களுக்குள்ள பரந்த அனுபவம், புதுமுறையில் உங்களுக்குள்ள ஆர்வம் ஆகியவை கி.பி. 2000க்குள் இந்தக் குறிக்கோளை நாங்கள் எட்டிவிடத் துணைபுரியுமென நம்புகிறேன்.

**—மாண்புமிகு முதல்வர்**
**டாக்டர் கலைஞர்,**

*(27.12.89-இல், சென்னையில், இந்திய இதயநோய் மருத்துவக் கழகமும், இந்திய இதயநோய் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் கழகமும் இணைந்து நடத்திய கூட்டு மாநாட்டின் துவக்க உரையிலிருந்து)*

---

**மனித உரிமைகளுக்காகப் பாடுபட்ட மாபெரும் தலைவர்கள் இன்றைக்கு நம்மிடையே இல்லை; ஆனால், அவர்களுடைய இலட்சியங்கள் -கொள்கைகள் - கோட்பாடுகள் நம்மிடம் நிறைந்திருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற நாம் பாடுபட வேண்டும்.**

**— முதல்வர் கலைஞர்**


---



# புத்தாண்டு

# பொங்கல்

# நல்வாழ்த்துக்கள்!!



பலவித புதிய — டிசைன்கள் வண்ணங்கள் ரகங்களில் — தூயபட்டு மற்றும் தரமான தங்க நூலிழை சரிகையுடன் கூடிய காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டுப் புடவைகள்

கீழ்க்கண்ட எங்களது கிளைகளில் கிடைக்கும்.

**காஞ்சிபுரம்: 207, காந்திரோடு, காஞ்சிபுரம்-631 501.**

| | | | |
|---|---|---|---|
| **பொரடட்டூர்:**<br>13/401, சிவாலயம் தெரு, பொரடட்டூர்-60<br>(ஜோதிவஸ்திராலயம்) | **மதுரை**<br>102, கிழக்கு வெளிவீதி, மதுரை-1 (ஏஜென்சி பாண்டியன் கூட்டுறவு சிறப்பங்காடி) | **ஈரோடு**<br>19, திருவேங்கடசாமிதெரு, ஈரோடு-1<br>(தேவி ஏஜென்ஸி) | **கோயம்புத்தூர்**<br>830, கிராஸ்கட் ரோடு<br>கோயம்புத்தூர்<br>(உமையாள் ஏஜென்ஸி) |
| **சென்னை**<br>காஞ்சி கூட்டுறவுபட்டு<br>உம்மிடியார்ஸ் ஷாப்பிங் சென்டர்<br>சென்னை-2 | **சேலம்**<br>256.2வது அக்ரஹாரம்<br>சேலம்-1<br>(குமரகிரி ஏஜென்ஸி) | **காரைக்குடி**<br>45, அம்மன்சன்னதி தெரு<br>காரைக்குடி,<br>(ஏஜென்ஸி-ரங்கூன் ஹால்) | **பெங்களூர்**<br>178, கடைஎண் 9<br>ஆனந்தபவன் காம்ப்ளக்ஸ்<br>சிக்பெட், பெங்களூர்-53<br>(ஏஜென்சி<br>பி.விஸ்வநாதய்யா & கோ) |

போன்: 2222, 2836 தந்தி: ''திருகோ சில்க்''

மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களுக்கு எங்களின் உளம்கனிந்த வரவேற்பு

## காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட் நெ.ஜி. 2054

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

207, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631 501

# அடடா பொங்கல் அமிழ்து!





## பாவேந்தர் பாரதிதாசன்

***தலைவி:***

இதுதான் தைத்திங்கள் எனக்கடல் மேல்வந்த
புதிய இளங்கதிர், பொன்அத்தான், பொன், பொன், பொன்!

***தலைவன்:***

ஆம்! ஆம் என் அன்பின் உருவே அது 'சுடர்ப் பொன்'
நீர்மேல், நிலமேல், நிழல்தரும்பூஞ் சோலை மேல்
உன்மேல் தனதொளியை வீசி உளத்திலெல்லாம்
அன்பின் எழுச்சியினை ஆக்கியது. வாழ்க கதிர்!
காலை மலர்ந்ததுவே கண்ணேநான் சென்று, வயல்
வேலை தொடங்கி விளைச்சல் அறுத்துவந்தே
இந்நாளில் இந்தா எனக்கொடுக்கச் செல்கின்றேன்
பொன்னே! புனலாடி இல்லம் புதுக்கிடுநீ!

***தலைவி:***

செல்வப் பரிதி சிரித்து வந்த தைக்கண்டீர்
கொல்லைக் கொடிகள் குலுங்கச் சிரித்ததுபோல்
காலை மலர்ந்ததையும் கண்டீர்-விரைந்து வயல்
வேலை தொடங்கி விளைச்சல் அரிந்த அரிக்
கட்டடித்துத் தூற்றியொரு கட்டை வண்டி மேலேற்றிப்
பட்டபெரும் பாட்டின் பயனிந்தா என்பீர், பின்
உள்ள மகிழ்ந்துங்கள் உழுதோளை நான்தொழுது
வெள்ளத் தெடுத்து"விடிவெள்ளி போலரிசி
ஆக்கி நல்ல பானையிலே ஆவின்தனிப்பாலைத்
தேக்கி அதிலிட்டுச் செங்கரும்பின் கட்டியிட்டு
''திங்களோ தைத்திங்கள்'' ''செந்தமிழே தாய்மொழியாம்!''
''பொங்கலோ பொங்கல்'' எனப் பொங்கிவரப் புத்துருக்கு
நெய்யும் பருப்பும் நறும்பொடியும் நேர்கொடுத்து
மெய்யன்பி னோடு தமிழர் விழா வாழ்த்திப்
பானை இறக்கிப் பலபேர்க் கிலையிட்டுத்
தேனைப் பலாச்சுளையைச் சேர்த்துப் படைப்பேன்.
எடுத்துண்டு நீவிர் அதை என்ன வென்று சொல்வீர்!

***தலைவன்:***

அடடா! இப் பொங்கல் அமிழ்தமிழ் தென்பேன் நான்!

உயர்ந்த ரக பட்டு மற்றும் தரமான ஜரிகையுடன் கூடிய,
காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் தயாரிக்கும் சிறந்த கூட்டுறவு நிறுவனம்

## டாக்டர் கலைஞர் கருணாநிதி பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., கே. எச். 4,

**88-89, காந்தி ரோடு காஞ்சிபுரம்-631 501.**

**கிளை விற்பனை நிலையங்கள்:**

1. ஸ்ரீஅய்யப்பன் சில்க் கேந்திரா, பெங்களூர்.
2. சாயிசுதா எண்டர்பிரைசஸ், இந்துப்பூர்.
3. தங்கம் சில்க்ஸ், பாண்டிச்சேரி.
4. காமதேனு சில்க்ஸ், சேலம்.
5. விஷ்ணு சில்க்ஸ், கோயம்புத்தூர்.
6. சரஸ்வதி, & கோ, மதுரை.
7. தேவி சில்க்ஸ், ஈரோடு.
8. காஞ்சி கூட்டுறவு சில்க்ஸ் சென்னை.
9. மான்ரோஸ் டெக்ஸ், கோடம்பாக்கம், சென்னை.

**வ. கிருஷ்ணமூர்த்தி, பி.எஸ்ஸி,**
துணை இயக்குனர்/தனி அலுவலர்.



*துவக்கம் : 1942* *தொலைபேசி : 2478*

அழகுக்கு அழகு செய்யும் கண்கவர் வண்ணங்களின் படைப்பு
நங்கையர்கள் விரும்புகிற அழகிய டிசைன்கள்

தமிழகத்தில் முதன் முதலாகத் துவக்கப்பட்ட பட்டுக் கூட்டுறவுச் சங்கம்

## காஞ்சிபுரம் பட்டு நெசவாளர்கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட் எண்.ஜி. 1099,

**443, காந்தி ரோட், காஞ்சிபுரம் 631 501**

**(குளிர்பதனம் செய்யப்பட்டது)**

**கிளைகள்:**

(1) 231-232, சிக்பெட், கிருஷ்ணா மார்க்கெட், பெங்களூர் 560 053.
(2) 15-3-413, மெயின் பஜார், இந்துபூர் 515 201.
(3) 6, சி.எஸ்.ஐ. கட்டடம், அசோகா ரோட், தும்கூர் 572 101.
(4) 12, 2-வது அக்ரஹாரம், சேலம் 636 001.
(5) 26/118, இராஜ வீதி, கோயம்புத்தூர்-641 501.
(6( 12, கிருஷ்ணராஜேந்திரா சர்க்கிள், மைசூர்-570 001.
(7) 139, கீழ வெளி வீதி, மதுரை-625 001.
(8) 15/132, சுபாஷ் ரோட், நியூடவுன், அனந்தபூர்-515 001.
(9) 218, நேதாஜி ரோட், ஈரோடு-638 001.
(10) காஞ்சி கூட்டுறவு பட்டு சென்னை-600 002.

**இரா. நடராஜன்,**
உதவி இயக்குநர்/தனி அலுவலர்

தமிழ் வளர்த்த பெரியார்:



## அருந்தமிழ்க் காவலர்

# ஆறுமுக நாவலர்

வேலூர் ம. நாராயணன்

பிறந்தது முதல் தமிழே நினைந்து, தமிழே பேசி, தமிழே உயிர்த்துத் தமிழருக்காகத் தம் அகவாழ்வைத் துறந்த தண்டமிழ்த் துறவி;தொண்டர் தம் தலைவர்; இலங்கை யாழ்ப்பாணம் நல்லூர் தந்த அருந்தமிழ்க் காவலர் ஆறுமுக நாவலர் ஆவார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (18-12-1822) தோன்றி, தமிழுக்கும் சைவத்திற்கும் இமாலயத் தொண்டு களாற்றி அந்நூற்றாண்டின் இறுதியில் (4-12-1889) புகழுடம்பு எய்தியவர் நல்லூர் ஆறுமுக நாவலர்.

ஏதோ பிறந்தோம்; வளர்ந்தோம்; மணம் முடித்தோம்; மழலையரைப் பெற்றோம்; எல்லோரையும் போலவே ஒரு நாள் மறைந்தோம் என்னும் ஒரு சராசரி மாந்தனைப் போன்றில்லாமல், தாம் வாழ்ந்திருந்த அறுபத்தேழு ஆண்டுகளில் தமிழ் செழிக்கவும், சைவம் ஓங்கவும் உழைத்தவர் ஆறுமுக நாவலர்.

**இளமைப் பருவம்**

ஆறுமுக நாவலரைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கிப் பெருமை பெற்றவர்கள் கந்தப்ப பிள்ளையும், சிவகாமி அம்மையாரும் ஆவர். தம் பெற்றோர்க்கு இறுதி மகவாகத் தோன்றிய நாவலர், இளம் வயதிலேயே கூர்த்த மதியுடன் விளங்கினார்; அறிவு கொளுத்தியதும் பற்றிக் கொள்ளும் கற்பூர மலையாகத் திகழ்ந்தார். பன்னிரண்டாம் வயதிற்குள் 'நிகண்டு', 'அந்தாதி', 'பிள்ளைத்தமிழ்' போன்ற நூல்களைக் கற்றுத் தேர்ந்தார்.

நாடகக் கலையில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த இவர்தம் தந்தையார் ஒருநாள் நாடகமொன்றினை எழுதிக் கொண்டிருந்த நிலையிலேயே மறைந்துவிட்டார். முற்றுப் பெறாத அந்த நாடகம், கட்டி முடிக்கப் பெறாத இல்லம் போலாகி விட்டது. அதனை எழில்மிகு மாடமாக்கி, முற்றுப் பெறச் செய்தார் நாவலர். அப்பொழுது இவர்க்கு வயது ஒன்பது!

இந்நிகழ்ச்சியால், இவர்தம் தமையன்மார்கள் பெரிதும் மகிழ்ந்தனர். அரவணைத்துப் போற்றிப் பாராட்டி ஒத்துழைப்பு நல்கினர். அதன் பயனாக நாவலரின் நெஞ்ச மஞ்சத்தில் தமிழும் ஆங்கிலமும் முறையாகவும், செறிவாகவும், நிறைவாகவும் சென்றமர்ந்தன. இரு மொழிகளையும் பெயர்க்கும் ஆற்றலைப் பெற்றார் நாவலர்.

**இயேசு மதமும் இயற்றமிழ்க் கடலும்**

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெர்சிவல் பாதிரியார் ஒரு பள்ளி நடத்தி வந்தார். அப்பள்ளியில் நாவலர் தமிழும், ஆங்கிலமும் பாங்குறப் பயின்றார். இவர்தம் நுண்மாண் நுழைபுலத்தைத் தெளிவாக உணர்ந்த பெர்சிவல் பாதிரியார், தம் பள்ளியில் மாணவராக இருந்த நாவலரைக் கீழ் வகுப்புகட்கு ஆங்கிலமும், மேல் வகுப்புகட்குத் தமிழும் பயிற்றுவிக்கும் ஆசிரியராக நியமித்தார். அப்பொழுது நாவலர்க்கு வயது பதின்மூன்று!

விவிலியத்தைத் தமிழில் பெயர்க்காமல், கிறித்தவத்தைத் தமிழ் மண்ணில் வேரூன்றச் செய்யவியலாது என்பதை நன்குணர்ந்த பெர்சிவல் பாதிரியார், அப்பெரும் பொறுப்பை ஆறுமுக நாவலரிடம் ஒப்படைத்தார். நாவலரும் அப்பணியைச் செவ்வனே நிறைவேற்றினார். ஏறத்தாழ, ஒரு நூற்றாண்டாகியும் இன்றளவும் தமிழ்க்கிறித்தவர்கள் இவராக்கிய விவிலியத்தையே பின்பற்றுகின்றனர் என்பதொன்றே இவர்தம் மொழிபெயர்ப்பு வன்மையைத் திண்மையாகக் காட்டுகின்றது.


**பெரிய புராணப் பற்று**

ஒரு நாட்டின் முதலமைச்சரால் (சேக்கிழார்) இயற்றப்பட்டது பெரிய புராணம்!சைவந் தழைக்கப் பாடுபட்ட அறுபத்து மூவர் வரலாற்றை நிறை தமிழில் நவில்வதுவே பெரிய புராணம். நம் நாவலர் இந்நூலைத் தம் உயிருக்கும் மேலாக விரும்பினார்.

**இலட்சியம்**

உலகில் உயர்திணையாகப் பிறந்தவர்க்கெல்லாம் ஓர் இலட்சியம் நிச்சயம் வேண்டும். நாவலரும்

## சுத்தம் செய்யப்பட்ட நீரானாலும் காய்ச்சிப் பருகுவது நல்லது



சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்

டி.ஐ.பி.ஆர்/2818/எம்எஸ்/89

''தமிழ், சமயம் ஆகிய இரண்டும் என் இருகண்கள்; அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன்; அவை வாழப் பணிபுரிதலே என் வாழ்வின் குறிக்கோள்'' என்னும் இலட்சியத்தை வகுத்து அதற்கு இலக்கியமாகத் திகழ்ந்தார்.



பொது நலத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் எவன் மீதும் சுயநல விஷமிகள் பொறாமைப் பட்டு, பொய்ப் பிரச்சாரம் செய்வது எப் போதுமே உண்டு. அதைக் கண்டு பயந்து விட்டால் அப்புறம் காரியம் நடக்காது. நம் சொந்த மானம் போவதாக இருந்தாலும் போகட்டும். இனமானம் காப்பாற்றப் பாடு படுங்கள். விஷமப் பிரச்சாரத்திற்கு, விரட்டுதல் பிரச்சாரத்திற்கு, அடக்குமுறைப் பிரச்சாரத்திற்குப் பயப்படாதீர்கள்

### மும்மொழிப் புலமையும் முதுபேரறிவும்

மிக இளம் பருவத்திலேயே தமிழும், ஆங்கிலமும் கற்றுத் துறை போகிய நாவலர், வேதாகமங்களை அறிதற்பொருட்டு வட மொழியும் கற்றுத் தேர்ந்தார். தொடக்கத்தில், வடமொழிவாணர் சிலர், இவர்க்கு வடமொழியைப் பயிற்றுவிக்கக் கூடாது எனத் தடைக்கற்களாக நின்றனர். பின்னர், 'கற்பித்தல் கூடாது', 'கற்பித்தல் கூடும்' என இரு சீட்டுகளை எழுதி, ஒரு குடத்தி விட்டுத் திருவுளச் சீட்டு எடுத்தனர். 'கற்பித்தல் கூடும்' எனும் சீட்டு வந்தது. பின்னர் அமைதியாயினர்!

தம்பால் வருவாரிடத்துப் பன் னூல் கருத்துக்களையும், வாரிவாரி வழங்கினார் நாவலர். 'இவரே நம் ஐந்தாம் குரவர்' என இலங்கை மக்கள் மட்டுமின்றி, இந்திய மக் களும் போற்றிப் பாராட்டும் தகைமை பெற்றார்.

தமிழ்த் தோணியில் ஏறிச் சைவக் கடலில் நெடுந்தொலைவிற்குச் சென்று விட்ட நாவலர்க்கு இல்லறம் என்னு மொரு இன்பப் பொய்கை இருப் பதே மறந்துவிட்டது. இதனை நினை வூட்ட இவருடைய உடன்பிறந்தார் பன்முறை முயன்று பார்த்தும், தோற்றனர். முடிவில், நாவலரின் குருவாகிய வேதக் குட்டிக் குருவிடம் முறையிட்டனர். அவரும் நாவலரிடம் திருமணம் பற்றி வற்புறுத்தினார். ஆசானின் எந்தக் கருத்தையும் மறுத்து அறியாத நாவலர் முதன் முறையாக அன்றைய தினம், ''இந்த ஒரு பேச்சு மட்டும் வேண்டாம்'' எனப் பணிவுடனும், உறுதியுடனும் உரைத்தார்.

### சொற்பொழிவுத் திறன்

1849-ஆம் ஆண்டு வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில் முதற் சொற்பொழிவைத் தொடங்கினார் நாவலர். பின்னாளில் இவர் நாவலர் பட்டம் பெறுவதற்கான வித்து அன் றைக்கு ஊன்றப்பட்டது. வாரந் தோறும் நிகழ்ந்த அச்சொற்பொழி விற்கு வரவேண்டிய கார்த்திகேய ஐயர் ஒருமுறை வரவில்லை. உடனே, அங்கிருந்த மக்கள் நாவலரைச் சொற்பொழிவாற்ற மிகவும் வேண் டினர். இவரோ 'ஆயத்தமில்லை' என முதலில் மறுத்தும், மக்கள் பெரிதும் வற்புறுத்தவே, 'ஆயத்த மில்லை' என்பதையே தலைப்பாக அமைத்து, 'மரணத்திற்கு ஆயத்த மில்லை' என விரித்து, இனிமை மலர, வியப்பு மணக்க, அரியதொரு சொற்பொழிவுத் தேன்மழையைப் பொழிந்தார்.

நாவலர் சொற்பொழிவாற்று தற்கு அணியமாகிய முறை இன் றைய பேச்சாளர்கட்கு ஒளிப்பாதை ஆகும். ஆம்! பேசுவதற்குப் பத்து நிமிடங்கட்கு முன், தொடர்புடைய நூல்களைப் புரட்டி, ஒரு தாளில் பாடல்களின் முதலடிகளைக் குறித் துக் கொள்வார். அதை வைத்துக் கொண்டே, நெடுநேரம் பேசி, மக்களை மகிழ்விப்பார். இதற்கு அடித்தளம் இவர்தம் நினைவாற்றலே ஆகும்.

சைவ சமயத்தின் சிறப்புகளை நாவலர் தேன்தமிழில் குழைத்துத் தந்த காரணத்தால், அந்நாளில் புறச் சமயங்கட்கு மாறவிருந்த எத் துணையோ தமிழர்கள் தாய்ச் சமயத் திலேயே வேரூன்றிக் கிளை பரப்பி விழுதுவிட்டனர்.

### நாவலர் பட்டம்

இவர்தம் சொற்பொழிவுத் திறமை யும், பெருமையும் கரை கடந்து தமிழகமெங்கும் பரவியது. இதன் பயனாகத் திருவாவடுதுறை ஆதீனத் துத் தலைவர், தமது ஆதீனத்திற்கு அழைத்து, சிறப்புப் பல செய்து, ''நாவலர்'' என்னும் பட்டத்தை வழங்கினார்கள். அன்று முதல் இவர் 'ஆறுமுக நாவலர்' எனக் கையெழுத்திடலானார்.

### பாப் புனையா நோன்பு

எண்ணற்ற நூற் பயிற்சியும், வரம்பிலா இலக்கண அறிவும் வாய்க் கப் பெற்றிருந்தும் நாவலர் பாக்கள் இயற்றுவதை என்றுமே விரும்ப வில்லை. அன்பர்கள் காரணங் கேட்டபொழுது ''பாடல்கள் இயற்று வது இறைவழிபாடு செய்வதற்கே! அதற்குத் தேவாரத் திருவாசகச் செழும்பாடல்கள் உள்ளபொழுது பாடல் யாத்தல் வேண்டுவதில்லை'' என்று கூறுவார்.

### நெஞ்சில் நிறைந்த நாவலர் தொண்டுகள்

நாவலர் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலும், தமிழகத் தில்லை யிலும் ''சைவப் பிரகாச சாலை'' எனும் பெயரில் பள்ளிகள் தொடங்கி னார். சிதம்பரத்தில், அப்பள்ளி தற் போது 'ஆறுமுக நாவலர் உயர்நிலைப் பள்ளி' எனும் பெயரில் இயங்கி வருகின்றது.

வண்ணார் பண்ணையில், 'வித்தியாநு பாலன யந்திரம்' எனுமொரு அச்ச கம் நிறுவி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், சிவாலய தரிசன விதி, சைவ வினா-விடை ஆகிய நூல் களைப் பதிப்பித்தார்.

நாளடைவில் சென்னையில் ஓர் அச்சகம் நிறுவி, திருக்குறள் - பரி மேலழகர் உரை, தொல்காப்பியம்-

தரமான காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், பாவாடைகள், சோளி ரகங்கள்
நியாயமான விலையில் வாங்கச் சிறந்த இடம்.

தொலைபேசி : 2201 தந்தி : "முருகோசில்க்"

**காஞ்சிபுரம் முருகன் பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ. ஜி, 1653,**

**79, காந்திரோடு, காஞ்சிபுரம் - 631 501.**

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

**விற்பனை நிலையங்கள்:**

1. 'காஞ்சி கூட்டுறவுப் பட்டு,
உம்மிடியார் ஷாப்பிங் சென்டர்,
811 அண்ணா சாலை,
சென்னை-600 002.
2. நெ.36, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.
(நேரடி விற்பனை நிலையம்)
3. நெ. 9, கீழ் ஆவணி மூல வீதி,
மதுரை-625 001.
4. "வேதா சில்க்ஸ்"
நெ. 10.சி. இரண்டாவது அக்ரஉறாரம்,
சேலம்-636 001.
5. ஸ்ரீவெங்கடேஸ்வரா சில்க் அவுஸ்,
நெ. 206, ருக்மணி பில்டிங்ஸ்,
சிக்பெட், பெங்களூர்-560 053.

க. சண்முகசுந்தரம்,
இணை இயக்குநர்/தனிஅலுவலர்.

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்குச் சிறந்த இடம்

**காஞ்சிபுரம் காமாட்சியம்மன் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட். நெ.ஜி. 1612**

(குளிர்பதனம் செய்யப்பட்டது)

168.எ. காந்திரோடு காஞ்சிபுரம். 631 51. போன்:2202

**கிளை விற்பனை நிலையங்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 28-10-26, மதூதி வீதி, அருண்டேல்பேட், | விஜயவாடா-520 002. | போன்:77375 |
| 2. | 231/13, கிருஷ்ணா மார்க்கெட், சிக்பெட், | பெங்களூர்-560 053 | |
| 3. | 139, கீழவெளிவீதி, | மதுரை-625 001 | போன்:36988 |
| 4. | 27, இரண்டாவது அக்ரஹாரம், | சேலம்-636 001 | போன்:68740 |
| 5. | 15-3-423, பிரகாசம், பந்தலு ரோடு, | இந்துப்பூர்-515 201 | போன்:21061 |
| 6. | 19, திருவேங்கடசாமி தெரு, | ஈரோடு-638 001 | போன்:78905 |
| 7. | காஞ்சி கோஆபரேடிவ | சென்னை-600 002. | |

இரா. விஜேந்திரன், பி.ஏ.,
துணை இயக்குநர்/தனிஅலுவலர்.

★★எங்கள் சங்கம் மாநிலத்திலேயே சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சேனாவரையர் உரை போன்ற பதினைந்து நூல்களைப் பதிப்பித்து அன்னைத் தமிழுக்கு அளப்பரிய தொண்டுகள் புரிந்தார்.

இவருடைய பதிப்பு நூல்கள் பிழையற்றிருக்கும்; திருத்தமுடன் தெளிவான விளக்கம் தருவனவாக இருக்கும். நாவலர் பதிப்பு என்றாலே, தமிழரிடையே நல்ல மதிப்பு பரவி இருந்தது.

ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், கோயிற்புராண உரை, சைவ சமய நெறியுரை, திருச்செந்தில் அந்தாதியுரை போன்ற நூல்களுக்கு இவர் எழுதியுள்ள உரை பொன் போல் போற்றத் தக்கதாகும்.

நான்கு பால பாடங்கள், இலக்கண வினா-விடை, திருவிளையாடற் புராண வசனம், பெரிய புராண வசனம், பெரிய புராண சூசனம் போன்ற நூல்களைப் புதிதாகப் படைத்துத் தமது படைப்பாற்றலையும் நாவலர் நிறுவியுள்ளார்.

### பிறவாப் பெருநிலை

ஏறத்தாழ முப்பத்திரண்டாண்டுகள் ஓய்வின்றித் தொண்டாற்றிய நாவலர், 1889-ஆம் ஆண்டின் உச்சியில், ஒரு நாள், யாழ்ப்பாணக் கல்வி நிலையத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழாவில் உரையாற்றினார். அப்பொழுது, தம்மையும் மறந்து யாவரும் கண்ணீர் சிந்துமாறு மிக உருக்கமுடன் பேசினார். பேச்சின் முடிவில், ''இதுவே என்னுடைய கடைசிப் பேச்சு'' எனக் குறிப்பிட்டார். அதன்பிறகு அவர் எந்தக் கூட்டத்திலும் பேசவே இல்லை. உடல் நலம் குன்றிய நிலையில், 4-12-1889 அன்று பிறவாப் பெருநிலை எய்தினார். அந்தநாள் தமிழுலகமே வருந்தித் துடித்த நாள்களுள் ஒன்றாயிற்று.

இசைபட வாழ்ந்த இலங்கை நாவலர் இவ்வையகத்திற்கு வழங்கிச் சென்ற செய்திகளுள் ஒன்று:

**''ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயத்தைச் சார்ந்து நிற்கின்றீர்கள். தான் விரும்பிய சமயக் கொள்கைவழி யொழுகுவது தனிமனிதனின் உரிமையாகும். அதனினும் சிறந்தது, அவரவர் சமயத்தில் நின்று ஒழுகி உலகிற்குப் பயன் செய்வதாகும்''** என்பதாகும்.

## மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகச்சாலை செயலாக்க முறைகள்

தமிழகப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகச் சாலைகளின் நிதி நிலையினை வளப்படுத்தவும், அதிக அளவில் மாணவர்களைக் கூட்டுறவுப் பண்டகச் சாலைகளில் உறுப்பினர்களாக்கவும், கூட்டுறவுப் பண்டகச்சாலைகளைப் பள்ளிகளில் நன்முறையில் செயல்படச் செய்து, அதன் மூலம் மாணவச் சமுதாயத்தினருக்குத் தேவையான பொருள்களை வழங்க வழி வகை செய்யவும் பள்ளி நிறுவனங்களுக்குக் கீழ்க்கண்ட அறிவுரைகளை அரசு வழங்கியுள்ளது:

ஒவ்வொரு பள்ளியிலும் மாணவர் சேர்க்கையின் போது அனுமதிக்கப்பட்ட கட்டணங்களுடன், மாணவர்களைக் கூட்டுறவுப் பண்டகசாலையில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள சேர்க்கைக் கட்டணமாக ரூ. 5 வசூலிக்க அனுமதிக்கப்படுகிறது. இத்தொகையைப் பங்குத் தொகை முதலீடாக வைப்பு நிதியில் செலுத்தலாம்.

பள்ளியிலுள்ள ஆசிரியர்களையும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம். பொறுப்புள்ள ஆசிரியர் ஒருவரைக் கூட்டுறவுப் பண்டகச்சாலைக்குப் பொறுப்பாளராக நியமித்து, சிறப்பு மதிப்பூதியம் ரூ. 100/- மாதந்தோறும் அனுமதிக்கலாம்.

பள்ளி மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள், பேனா, பென்சில், எழுதுதாள், அழிப்பான், முக்கிய குறிப்புப் புத்தகங்கள், செயல்முறை நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றைப் பெருமளவில் விற்பனை செய்வதன் மூலம், இலாபம் அதிகம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகச்சாலை சிறந்த முறையில் நடைபெற மூலதனம் தேவை. இது வசதி படைத்த மாணவ/மாணவிகளிடமிருந்து நிர்ப்பந்தமின்றிப் பெறப்பட வேண்டும். பள்ளி வசதிக் கட்டணத்திலிருந்தும் கணிசமான தொகையை முதலீடாகச் செலுத்த அரசு அனுமதியளிக்கிறது.

பள்ளிகளில் சஞ்சயிகா திட்டம் நடைமுறையில் இருப்பதால் மாணவ/மாணவியரிடையே சிக்கன மனப்பான்மை ஏற்பட்டு பணம் சேமிக்க வாய்ப்புள்ளதால், பெற்றோர்களுக்குச் சிரமம் கொடுக்காமல் பங்கு முதலீடு திரட்டப்பட வேண்டும்.

மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகச்சாலை நன்முறையில் செயல்படுவதற்கு மூலதனம் நிதி உதவி தேவை. மாணவர்களுக்குத் தேவையான அதிகப்படியான பொருள்களை வாங்கி நல்லமுறையில் செயல்படச் செய்வதற்கு அரசு கடன் உதவி மூலம் நிதி உதவி திரட்டலாம். குழு உறுப்பினர்களும் கூட்டுறவுப் பண்டகச்சாலை ஆய்வாளரும் நல்லமுறையில் செயல்பட வேண்டும்.

அந்தந்தப் பள்ளிகளில் வசதி நிதிக் குவிப்பிலிருந்து, மாணவர் கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யலாம். அப்பள்ளி ஆசிரியர் ஒருவரிடம் நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைத்து, பள்ளிக் கல்வி இயக்குநர் நிர்ணயிக்கும் ஒரு தொகையைச் சிறப்பூதியமாக வழங்கலாம்.

# தமிழ்த் திருநாள் கண்ட

# நமச்சிவாயனார்

மாண்புமிகு கல்வி அமைச்சர்

பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன்

"பொங்குக பொங்கல் பொங்குக எங்கணும்
பொங்குக பொங்கல் இன்பமே எய்துக!
பொங்கற் புதுநாள் போந்தது போந்தது
எங்கணும் எவர்க்கும் இன்பமே எய்துக!
பொங்குக பொங்கல், பொங்குக பொங்கல்!
பொங்குக பொங்குக பொங்குக பாலும்!
ஒக்கலும் மக்களும் உவந்துடன் உண்க!
மக்கள் அனைவரும் மகிழ்ந்தே உண்க!
புத்துடை உடுமின் புத்தணி அணிமின்!
பத்தி கொண்டே பரமனைப் பணிமின்!
நந்தம் தமிழ்மொழி நலம்பெற் றோங்கிட
எந்தக் காலும் இன்புற வாழ்த்துக!
தண்கடற் பரப்பிற் சாரும் மணலினும்
பண்புற வானில் பரவும் மீனினும்
வாழ்க அனைவரும் வாழ்க பல்லாண்டு!
வாழ்க பல்லாண்டு வளமெலாம் படைத்தே!

முதன்முதலாகப் பொங்கல் விழாவைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாடத் தலைப்பட்ட தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாயனார் வழங்கிய திருநாள் வாழ்த்து இதுவாகும்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் மக்கள் வாழ்வு தமிழர் என்னும் உணர்வற்றுத் தட்டுத் தடுமாறி நின்றது. தமிழ் மரபு, தமிழர் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு என்பவை குறித்துத் தெளிவின்றி நிலை கெட்டு நின்றனர் தமிழர். தமிழ் கற்ற புலவர்களிலேயே பலர், சமயச் சார்பால் கருத்துக் குழம்பிக் கிடந்தனர் எனில் மக்களைப் பற்றிக் கூறவா வேண்டும்? தமிழ் கற்றார் சிலர், கற்றாருள்ளும் தெளிந்தார் மிகச் சிலர். அவருள்ளும் தெளிந்ததனை வெளியிடும் துணிவுடையாரோ அரியர்.


அந்நிலையைத் தெளிந்தார் நமச்சிவாயனார். மக்களிடையே விளங்கிய பல்வேறு விழாக் களும், சில நம்பிக்கைகளையும் சமயச் சார்பான கதைகளையும், வடமொழிவழி எழுந்த வழக்கு களையும் ஒட்டியே கைக்கொள்ளப்பட்டன வாத லையும், பொங்கல் விழா ஒன்றுமே தமிழர் மரபொடு பொருந்தியும், இயற்கை நெறியோடும், உழவுத் தொழிலோடும், வேளாண்மைப் பண்போடும், விழாச் சூழலோடும் விளங்கியும், சமய வேற்றுமை கடந்து தமிழர் யாவர்க்கும் உரிய தாயும் அமைதலைக் கண்டறிந்தார். வாழ்கின்ற தமிழ் மக்கள் எல்லோரும், தாய்மொழிப் பற்றும் தமிழ் மொழித் தெளிவும் கொள்ளுதற்கு இத் திருநாளே ஏற்ற நன்னாள் எனக் கொண்டார்.

பண்டைத் தமிழரின் பெருவாழ்வை - சங்கத் தமிழ் இலக்கிய மாட்சியை - தமிழர்கள் பயின்ற கூத்தை - இத் திருநாளில் விளக்கியுரைத்தும்,



பாடிக் கேட்டும், ஆடிக் கண்டும் மக்கள் அறிந்து மகிழ வேண்டும் என்று விரும்பினார்.

அதன் பயனாகவே, பழந் தமிழ்ப் பொங்கல் விழா, உழவரும் பிறரும் மகிழ்ந்த கொண்டாட்டம், முத்தமிழ் முழங்கும் தமிழ்த் திருநாளாய் வண்ணங் கொண்டது. நமச்சிவாயனார் துவக்கி வைத்த தமிழ்த் திருநாளே, தென்னவர் எழுச்சிக்கு உரமூட்டும் திராவிடர் திருநாளாகவும் கொண்டாடப்படுவதாயிற்று.



இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், மக்கள் இடையே தமிழ்ப் பற்று இல்லை. மாணவர் இடையே தமிழ் கற்கும் ஆர்வம் இல்லை. அறுநீர்க் குளத்தில் ஆம்பல் பூக்குமோ? காயும் வெயில் எரிக்கையில் அல்லிதான் மலருமோ? தமிழகத்தின் தலையாய பல்கலைக் கழகத்திலும் ஒரு வட்டாரப் பேச்சு மொழி என்னும் பெயருடன், செந்தமிழ் ஓர் ஒதுக்கிடத்தில்தான் நிறுத்தப்பட்டிருந்தது. தமிழர்கள் தமிழ் நூல்களைக் கற்றுத் தமிழ்ப் புலமை எய்துதற்குப் பல்கலைக்கழகத் தேர்வு முறையிலேயே இடமில்லை. வடமொழியும் கற்றார்க்கே தமிழ்ப் புலமை உடையார் என்னும் தகுதி கிடைக்கும் என்னும் இடர்ப்பாடும் இழுக்கும் அடர்ந்து நின்றன. பள்ளிச் சிறார் தம் வயதுக்கும் வகுப்புக்கும் ஏற்பக் கற்றற்கான நடையில் எழுதப்பட்ட ஏடுகளும் இல்லாது தமிழ்த் துளிர்கள் கருகிக் கொண்டிருந்தன.

அந்நிலையில் இந்தக் குறைகளைக் களைவதில் முன்னின்று, தமிழுக்குப் பல்லாற்றானும் தொண்டாற்றியவர் பேராசிரியர் நமச்சிவாயனார்.

தொண்டை மண்டலத்தில் உள்ள காவேரிப் பாக்கத்தில் 1876-ஆம் ஆண்டில் பிறந்து, இளமையிலேயே தமிழ்க் கல்வி கற்று, சென்னையில் ஒரு தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து, பெரும்புலவர் (மகா வித்துவான்) சண்முகம் பிள்ளை என்பாரிடம் தம்மை மாணவராக ஆக்கிக் கொண்டு, தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கேட்டுத் தெளிந்தார். பின்னர் உயர்நிலைப் பள்ளிகள் சிலவற்றிலும், மேரி அரசியார் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றிப் புலமைத் திறத்தாலும், தமிழ் ஆர்வத்தாலும் தம்மிடம் பயின்ற மாணவ மாணவியர்க்குத் தமிழ் அமுதூட்டி, இலக்கியத் தேன் சுவை பயிற்றி, இளந் தமிழ் உள்ளங்களில் தமிழ் ஆர்வப் பயிர் தழைத்தோங்கச் செய்தார். அதுகாறும், தமிழ் மாணவர்கட்குத் தமிழ் வகுப்பு என்றாலே வேண்டப்படாத வேம்பாக, கசப்பு மருந்தாக இருந்தது போக, அவரது தமிழ் இனிமையால், அதுவே விரும்பிச் சுவைக்கும் கரும்பாக, இனிப்புக் கட்டியாக மாற்றங் கொண்டது என்றால் மிகையாகாது.

அக்காலப் புலவர்கள் சமய நோக்கத்துடனேயே தமிழ் ஏடுகளைப் பயின்றதன் பயனாக, அவர்களிடையே சமய வேற்றுமை தலைதூக்கி நின்றது. சாதி பற்றிய மூடநம்பிக்கையாலும் வெறுப்பு வளர்ந்தது. இவற்றால் பிறந்த சண்டைகளும், தாக்குதல்களும் பலப்பலவாகலின், புலவரிடையே ஒற்றுமையும் புலமையிலே மொழிப் பற்றும் அரிதாயின. அவர்களால் தமிழ் தழைத்து வளரத்தான் கூடுமோ? நமச்சிவாயனாரோ, தம்முடைய ஆசிரியரான பெரும்புலவர் சண்முகனாரிடம் கற்கப் புகுந்த காலத்திலேயே, தாம் சமயச் சண்டையிலும், சாதிப் பிணக்குகளிலும் ஒருநாளும் தலையிடா திருப்பதாக அவர் விதித்த கட்டளையை உளமார ஏற்றிருந்தார். பின்னாள்களில் அவரது எண்ணமும் செயலும் பொது நோக்குடையனவாகச் சிறக்க அஃது ஏதுவாயிற்று எனலாம். அவர் சைவந் தழுவி நின்ற போதிலும், அவரது தமிழ்த்தொண்டுஒரு பக்கச் சார்புடையது ஆகாது, புலவர்களிடையே தமிழ் அடிப்படையினின்று எழும் பொது உணர்ச்சியும், ஒற்றுமையும் உருவாகத் துணையாயிற்று.

தமிழ்ப் புலவர்கள் ஒன்று கூடுதற்கும், ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளுதற்கும் வாய்ப்பில்லாதிருந்த நிலையில் அவற்றிற்கு வாய்ப்பாக முதன் முதலாகப் புலவர் சங்கம் ஒன்று தோற்றுவிக்க முனைந்தார் அவர். சென்னைத் தமிழ்ப் பண்டித சங்கம் பிறந்தது. புலவர்கள் ஒன்று கூடி, உரையாடி மகிழக் கருத்து விருந்து நுகரத் தம் குறைகளை அரசினருக்கு எடுத்துக் கூறிக் களையுமாறு கேட்க, தமிழாசிரியர் தம் மதிப்பைக் கல்வித் துறையிலும் சமுதாயத்திலும் உயர்த்திக் கொள்ள இச்சங்கமே உறுதுணையாயிற்று.

அக்காலத்தில் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய தமிழ் ஆசிரியர்கள் சிறந்த புலவர்களாயினும் குறைந்த ஊதியமே பெற்று வருந்தினர். நமச்சிவாயர், அரசாங்கத்தை வற்புறுத்தித் தமிழாசிரியர்தம் ஊதியத்தை உயர்த்தச் செய்தார்.

பேராசிரியர் 1917-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்மொழித் தேர்வுக் குழுவின் தலைவராகவும், 1920-ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் தமிழ்க் கல்விக்குழுத் தலைவராகவும் அமர்ந்தார்.



சுடுநெருப்பில் புடம் போடப் போடத்தான் நல்ல தங்கம் கிடைக்கும். அதுபோல், பொது வாழ்க்கையில் இடையூறுகளுக்கு ஈடுகொடுத்தால்தான் நாட்டிற்கும் மொழிக்கும் இனத்திற்கும் நல்ல பணிகளை ஆற்றிடமுடியும்.

அந்நாள்களில் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற விரும்பும் ஒரு தமிழ்மகன், தமிழேயன்றி வடமொழியிலும் தேர்ச்சி பெற வேண்டும் என விதி இருந்தது. வடமொழியை ஒதுக்கின் பிறிதொரு மொழியில் தேர்ச்சி பெற வேண்டும். அதன் பயனாகத் தமிழ் நாட்டில் வாழும் பிறமொழியாளர்கள் 'வித்துவான்' ஆவதற்கு இருந்த எளிய வாய்ப்பு தமிழர்க்கு இல்லை. 'வித்துவான்' பட்டம் பெற்றவர்களும், அச் சொல்லின் வடிவுக்கேற்பப் பெரும்பாலும் வடமொழிபயின்றவர்களே! வடமொழியும் கற்றவர் என்று கூறுவது பொருந்தாது. தமிழும் கற்றவர்கள் எளிதாகத் தமிழ் வித்துவான்கள் ஆனார்கள். உண்மையான தமிழ்ப் புலமையுடையார் பலரும், 'வித்துவான்' பட்டம் பெறுதற்குக் கருதவே இடமில்லாத நிலை! என்னே தமிழ்த் தாயின் அவலம் இருந்தவாறு!

நமச்சிவாயனார் கல்விக் குழுத் தலைவராக அமர்ந்த பின்னரே, பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் புலமையும் அமர்வதாயிற்று. தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு, இத்தேர்வு விதிகள் இடையூறாகும் வகையை அரசினருக்கு விளக்கிக் கூறி, வலியுறுத்தி அதனை மாற்றுதற்கு இசைய வைத்தார். அதன் பயனாகவே தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை முறையாகக் கற்ற அளவில், வித்துவான் பட்டம் பெறலாகும் நீதி பிறந்தது. இக்காலத்தில் தமிழ்ப் புலமையுடையார் பலராகப் பெருகி வாழ்தற்கு வழியமைத்துத் தந்த பேரறிவாளர் அவரே.

தமிழ்மொழி, காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் ஒவ்வொரு துறையிலும் சிறக்க வேண்டுமென விரும்பி அவர் ஆற்றிய பணிகள் பல.

பள்ளியில் அடியெடுத்து வைக்கும் குழந்தைகள் படித்தற்கு ஏற்ற 'சிறுவர் ஏடு' முதல் உயர்நிலைப் பள்ளி, கல்லூரி வகுப்புகள் முடிய ஒவ்வொரு நிலையிலும் வகுப்பிலும் உள்ள மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற, உற்ற பாட நூல்கள் வரை, ஆங்கில மொழியில் அமைந்த வற்றிற்கு ஈடான பல ஏடுகளை எழுதினார் பேராசிரியர். எளிதான சில சொற்களில் தொடங்கி, வளமான கருத்துச் செறிந்த செந்தமிழ்க் கட்டுரை வரையில் இயற்றி, தமிழ்க் கல்விப் பயிர் வேர்விட்டு வளர நீர் பாய்ச்சினார். கற்றார் பலரும் படித்தற்கு ஏற்ற நூல்களும் எழுதினார்.

நாடகத் துறையில் மேல் நாட்டு இலக்கிய வளர்ச்சியைக் கண்ணுற்ற அவர், சில நாடகங்களும் (கீசகன், பிருதிவிராசன்) இயற்றினார். நல்ல தமிழ் நடை வளரவும் இலக்கியப் பயிற்சி செழிக்கவும், ஒரு திங்கள் ஏடு தேவை எனக் கண்டு 'நல்லாசிரியன்' என்னும் இதழைத் தொடங்கிப் பதினைந்து ஆண்டுக் காலம் பயனுற நடத்திப் பலருக்கும் அத்துறையில் வழிகாட்டியானார்.

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவதிலும் அவர் ஆர்வம் கொண்டார். இளம் பூரணர் உரையோடு, தொல்காப்பியத்தின் சொல் பொருள் அதிகாரங்களையும், இறையனார் களவியலையும் வேறு சில இலக்கியங்களையும் அவர் பதிப்பித்தார்.

அவரது தமிழ்ப் பணியின் அருமையும் பெருமையும் அவர் மறைந்த ஞான்று தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்கள் உள்ளங் கரைந்து பாடிய இரங்கற்பாவின் அடிகள் சிலவற்றால் விளங்கும்.

**'அருந்தினை தமிழைப் பொருந்தி அமிழ்தென**
**என்றும் இன்மொழி நன்றே வழங்கினை**
**சாதியை யொழித்து நீதியில் நடந்தனை**
**செந்தமிழ்த் தாயின் சிந்தை மகிழக்**
**கால ஒப்பனை சாலச் செய்தனை**

**நின்மொழி யுன்ன நின் செயல் எண்ண**
**உள்ளங் குழையுமே ஊனுங் கரையும்**
**என்ப நெக்குறும் அன்புக் கடலே**
**பெரிதே துன்பம் பெரிதே**
**காண்ப தென்றோ மாண்புறு முகமே!'**

இவ்வாறு தமிழ்ப் பெரியார் உள்ளத்தில் இடம் பெற்ற நமச்சிவாயர் தமது உள்ளத்தில் தமிழுக்குத் தந்திருந்த இடம் தான் என்னே?

**'தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!**
**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!**
**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!**
**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!**
**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!**
**மாந்தருக் கிருகணாய் வயங்குநன் மொழியே!**
**தரணியில் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!**
**தனித்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!'**

தனித்தினிது ஓங்குவாய் எனத் தமிழை வாழ்த்தி, தமிழ் உணர்வு வளரும் வழி போற்றித் தமிழ்த் திருநாள் விழா எங்ஙனும் தோற்றித் தமிழனாக வாழ்ந்த பேராசிரியர் நினைவு தமிழொடும் வாழாதோ?

# கால் நடைச் செல்வம் காத்திட..

டாக்டர் சி.சு. கல்யாண சுந்தரம், எம்.வி.எஸ்.சி,
இயக்குநர், கால்நடைப் பராமரிப்புத்துறை, சென்னை.

தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழாக வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன், நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும், சுயமாகவே வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், மத்திய, மாநில அரசுகள் பல சிறப்புத் திட்டங்களைச் செயல் படுத்தி வருகின்றன.

மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்றவும், கால்நடைகளை அபிவிருத்தி செய்யவும் இத்துறையின் மூலம் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், பன்றி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்கி, பராமரித்து, பொருளாதாரத்தினை மேம்படுத்துவது இத்துறையின் நோக்கமாகும்.

வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு அரிய பல ஆக்கப்பூர்வமான திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மானிய விலையில் கறவைப் பசுக்கள், கோழிகள், வாத்து, பன்றி இனங்கள் விநியோகிக்கப்படுவதுடன், அரசின் அங்கமான மகளிர் மேம்பாட்டுக் கழகம், பிற்பட்டோர் நல மேம்பாட்டுக் கழகம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிதி வசதி பெறவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

கால்நடைத் தீவனப் பயிர் வளர்ப்பு, கன்றுகள் வளர்ப்பு போன்ற இதரப் பணிகளுக்கும் அரசு மானியங்கள் வழங்கி வருகின்றது. இத்திட்டங்களின் மூலமாக, பழங் குடியினர்- மலைவாழ் மக்கள், வறட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்கள் மூலம் விசேடக் கவனம் செலுத்தப்பட்டு நன்கு பயன் அடைந்துள்ளனர்.

பால் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு சிறந்த கால்நடைப் பராமரிப்பு வசதிகளை அளிப்பதற்குக் கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டங்கள் மற்றும் கேந்திரத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழகத்தில் 30-6-89 முடிய 158 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 21 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்படுகின்றன. கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் 2 கோழிக் குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் மற்றும் 29 கோழியின விஸ்தரிப்பு நிலையங்கள் மூலம் இனவிருத்திக்கான முட்டைகளும், கோழிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மாநில உதவியுடன் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. 1981-ஆம் ஆண்டு முதல் கோழிகளுக்கான நோய்கள் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று ஈரோட்டில் செயல்பட்டு வருகின்றது.

1988-89-இல் (31-3-89) புள்ளி விவர அறிக்கைகள் மூலம் தமிழகத்தில் கோழி முட்டை உற்பத்தி 2,287 மில்லியன் ஆக உயர்ந்து உள்ளது.

30-6-89 முடிய கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தமிழகத்தில் 10,891 உறுப்பினர்களும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 1,71,105 உறுப்பினர்களும் பயன்பெற்று வருகின்றனர்.



தந்தி: ''அண்ணாசில்க்

போன்: 2248

கண்கவர் வண்ணங்கள்! நெஞ்சை அள்ளும் ரகங்கள்!!
தரமான காஞ்சிபுரம் பட்டாடைகள் வாங்க சிறந்த
கூட்டுறவு நிறுவனம்

# அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட், நெ. கே. எச். 1



498-499, காந்தி சாலை, காஞ்சிபுரம்-631 501
(விற்பனைக் கூடம் குளிர் பதனம் செய்யப்பட்டது)

## கிளைகள்

(1) 26/118, இராச வீதி, கோயமுத்தூர்
(2) 207, இரண்டாவது அக்ரஹாரம், சேலம்
(3) 40/1, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை.
(4) 138, கீழவெளி வீதி, மதுரை
(5) 8, கிருட்டினா அங்காடி மையம், சிக்பெட், பெங்களூர்
(6) 12, சர்வீஸ் லேன், கே. ஆர். சர்க்கிள், மைசூர்
(7) 15-84, சுபாஷ் ரோடு, அனந்தப்பூர்
(8) 15-3-421, மெயின் பஜார், இந்துப்பூர்
(9) 13, அசோகா ரோடு, தும்கூர்
(10) காஞ்சிகோவாப்பரேடிவ் சில்க்ஸ், உம்மிடியார் ஷாப்பிங் சென்டர்.
அண்ணாசாலை, சென்னை 2.

தி.பொ. இலட்சுமணன், பி.காம்
துணை இயக்குநர்/தனி அலுவலர்



திட்டத்தில் பயன் அடைந்துள்ளனர். 1976-77 முதல் 1988-89 வரை இத்திட்டத்தின் கீழ் அரசு மானிய மாக ரூ. 233.70 இலட்சம் அளிக்கப் பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு வைக்கோல் தீவனம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான போக்குவரத் துச் செலவினம் அரசு மானியமாக வழங்கப்படுகின்றது.

மேச்சேரி இன ஆடுகள் சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையிலும், இராமநாதபுரம் மற்றும் வேம்பூர் இனம் சாத்தூர் ஆட்டுப் பண்ணை யிலும் வளர்க்கப்படுகின்றன. ஓசூர் பண்ணையில் மாண்டியா மற்றும் கொரிடல் இன ஆடுகள் வளர்க்கப் படுகின்றன. செட்டிநாடு மற்றும் திருநெல்வேலி மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் 'கீழக்கரைசல்' இன ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

**ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்:**

1971-72 முதல் தமிழகத்தில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங் கங்கள் சிறந்த வளர்ச்சி பெற்று வருகின்றன. 30-6-89 முடிய உள்ள காலத்தில் 1,604 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சங்க உறுப்பினர்கள் கடனுதவி பெற்று தரமான ஆடுகளை வாங்கிப் பராமரித்து, பயன் அடைந்து வரு கின்றனர்.

உறுப்பினர்களின் கால்நடை களுக்கு மருத்துவ வசதி, குடற்புழு நீக்கம், உண்ணி நீக்கம் மற்றும் நோய்த் தடுப்பு ஊசிகள் போன்ற பணிகளைக் கால்நடைப் பராமரிப் புத் துறை அலுவலர்கள் கவனித்து வருகின்றனர்.

ஆடுகளுக்குக் காப்பீடு செய்வதற் கும் வழிவகைகள் செய்யப்பட்டு உள்ளன. இதுதவிர ஆடுகள் மரண நிதி என்ற நிதியினையும் ஒவ் வொரு சங்கமும் பராமரித்து வரு கின்றது. சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின் கீழ் 1988-89-ஆம் ஆண்டு முடிய 11,726 ஆடு அலகுகள் விநியோகிக்கப்பட்டு சிறந்த முறையில் பராமரிக்கப்படு கின்றன. மேற்கூறிய காலம் முடிய 268.6 இலட்சம் ரூபாய் மானிய மாகவும் வழங்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை மறுநிதிக் கழகம்:**

இத்திட்டத்தின் கீழ் 39 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட் டத்திற்கென ரூ. 83 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அவற் றில் ரூ. 38.21 இலட்சம் இக்கழகம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு ரூ.12.7 இலட்சம் அரசுப் பங்குத் தொகையாக முதலீடு செய்துள்ளது.

**சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம்:**

இந்தத் திட்டம் மத்திய அரசால் உருவாக்கப்பட்டு 1976-77 முதல் 1987-88 முடிய 21,044 யூனிட் டுகள் நிறுவப்பட்டுள்ளன. ஒரு யூனிட்டுக்கு (அலகு) 20 பெட்டை ஆடுகளும், ஒரு கிடாவும் ஆகும். 1987-88 முதல், யூனிட் ஒன்றுக்கு ரூ. 7,000 வழங்கப்படுகிறது. அதில் சிறு விவசாயிக்கு 25 சதம், நடுத்தர விவசாயிகளுக்கும், வேளாண் மைத் தொழிலாளர்கட்கும் 33 சதம், மானியமாக வழங்கப்படுகிறது. மீதி உள்ள தொகை அரசுடைமையாக் கப்பட்ட வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படுகிறது. 1987-88 முடிய 250.85 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

1988-89-ஆம் ஆண்டிற்கு 931 யூனிட்டுகள் வழங்கப் பெற்று ரூ. 25.38 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டம்:**

வட ஆர்க்காடு, தென் ஆர்க் காடு, தர்மபுரி, சேலம், திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் வாழும் 16,195 பழங்குடி மக்கள் இத்

**ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாய நிதி உதவி:**

ஐரோப்பிய சமூகப் பொருளா தாரக் குழு நிதி உதவியுடன் ஒரு ஆடு வளர்ப்புத் திட்டம், செங்கை அண்ணா, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 13.67 கோடி ஆகும்.

இத்திட்டத்தில் 60 உயரின டார்செட் பெட்டை ஆடுகளும், 10 கிடாக்களும் வெளிநாட்டிலிருந்து (இங்கிலாந்து அல்லது ஆஸ்தி ரேலியா) இறக்குமதி செய்து ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணை யில் வைக்கத் திட்டமிடப்பட்டுள் ளது. இந்த ஆடுகள் வாங்குவதற்கு ரூ.3.50 இலட்சம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. மேற்படி உயரின டார் செட் செம்மறிக் கிடாக்களை உள்ளூர் இன ஆடுகளுடன் இனச் சேர்க்கை செய்து 50 விழுக்காடு கலப்பினக் கிடாக்களை உற்பத்தி செய்து, இக்கிடாக்களை விவசாயி களுக்கு விநியோகித்து அவர்களு டைய உள்ளூர் இன ஆடுகளின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் உள்ளூர் இன ஆடுகளின் உடல் எடை அதிகரிக்குமென எதிர்பார்க் கப்படுகிறது.



# மாணவர் பக்கம்

## கல்வியின் சிறப்பு

—புலவர் நெல்லை சுப்பு

கல்வி யொன்றே கரையாத செல்வம்
கற்கக் கற்கத் தெவிட்டாத இன்பம்
அள்ளிப் பருகின் அமுதாக இனிக்கும்
அனைவர்க்கும் இதுவே பொதுவானதாகும்!

எண்ணும் எழுத்தும் கண்ணென மதிப்போம்!
எழுத்தறி வில்லா நிலையைக் களைவோம்
கற்கக் கற்க அறிவொளி பெருகும்
கனிந்த இன்பம் நெஞ்சினில் நிறையும்!

ஆடு மாடு அணிலும் கற்காது
பூடு பூண்டு புல்லும் பயிலாது
தேடும் செல்வம் யாவும் நிற்காது
தெளிந்த கல்வி என்றும் மறையாது!


## காரணம் காட்டும் கறுப்புப்பெட்டி

விமான விபத்துகள் நடக்கையில், அதற்கான காரணம் என்ன என்று அறியப் புலனாய் வாளர்களுக்கு உதவும் சாதனத்தின் பெயர்தான் கறுப்புப் பெட்டி. எல்லா விமானங்களிலும் இது பொருத்தப்பட்டிருக்கும்.

'கறுப்புப்பெட்டி' என்று இது அழைக்கப் பட்டாலும், இதன் நிறம் கறுப்பு அல்ல; சில கறுப்புப்பெட்டிகள் பிரகாசமான ஆரஞ்சு நிறத் தில் இருக்கும். சில பெட்டிகள் மஞ்சளாக இருப்பதும் உண்டு. இது 'கறுப்புப்பெட்டி' என்று எப்படி அழைக்கப்பட்டது என்று தெரியவில்லை. ஆரஞ்சு நிறத்தில் பெட்டி இருப்பதால், விபத்து நடந்த இடங்களில் சிதைவுகளுக்கு இடையேயும் 'பளிச்' என்று இது கண்ணில் படும்.

சில பெரிய விமானங்களில் ஒன்றுக்கு இரண்டு கறுப்புப்பெட்டிகள் இருப்பதும் உண்டு. கறுப்புப்பெட்டியில் உள்ள 'காக்பிட் வாய்ஸ்' என்னும் சாதனம், விமானியின் அறையில் நடக்கும் உரையாடல்களைப் பதிவு செய்யும். 'டேட்டா ரிகார்டர்' என்னும் மற்றொரு சாதனம் இந்த விமானத்தின் பல்வேறு இயக்கங்களைப் பதிவு செய்யும்.

ஒரு கறுப்புப்பெட்டியின் விலை 9,000 டாலர்களிலிருந்து 20,000 டாலர்கள் வரை இருப்பதுண்டு.



## உங்கள் பார்வைக்கு ...

கிட்டப் பார்வையைத் தடுப்பதற்காகவும், பார்வைக் கூர்மையைக் காப்பதற்காகவும், பின்வரும் எளிய விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

விளக்கு இடப் புறமாக இருப்பதுடன், பணியிடம் நல்ல வெளிச்சமாகவும் இருக்க வேண்டும்.

கண்களுக்கும், புத்தகத்துக்கும் இடையிலான தூரம், குறைந்த பட்சம் 30-36 சென்டி மீட்டர்களாவது இருக்க வேண்டும். குனிந்து உட்கார்ந்தபடியோ, படுத்துக் கொண்டோ, பஸ், கார், இரயில் போன்றவற்றில் பயணம் செய்யும்போதோ படிக்கக் கூடாது.

30-45 நிமிட நேரம் படித்ததற்குப் பின், அல்லது எழுதியதற்குப் பின், 5-10 நிமிடம் கண்களுக்கு ஓய்வளித்திடுக. உங்களுக்குக் கிட்டப் பார்வை இருப்பின், ஒவ்வொரு 25-30 நிமிட நேரத்துக்கும் ஒரு முறை ஓய்வு எடுத்துக் கொள்க.

கிட்டப் பார்வைக் கோளாறு அதிக அளவு இருப்போர் (மைனஸ் ஆறு டையோப்பர்களும் அதற்கு மேலும்) கனமான பொருள்களைத் தூக்குவதையும், சிறிய பொருள்களைப் பார்ப்பதையும், நெடுநேரம் தலை குனிந்தபடி அமர்ந்திருப்பதையும் தவிர்க்க வேண்டும்.

# மாணவர் கடமை

1. காலையில் எழு.
2. கடவுளைத் தொழு.
3. காலைக் கடன்களை முடி.
4. கருத்துடன் பாடம் படி.
5. குறித்த நேரம் பள்ளி செல்.
6. சாலை விதிப்படி சரியாய் நட.
7. கற்றலே தலையாய கடனென்றெண்.
8. கற்பிப்பவற்றைக் கருத்தாய்க் கவனி.
9. திருத்தமாய் எழுதித் தெளிவாய் வாசி.
10. புரியாதன கேட்டுப் புரிந்து கொள்.
11. அன்றைய பாடத்தை அன்றே முடித்திடு.
12. வினாவைத் தெரிந்து விடையை எழுது.
13. தேர்வு அறையில் நேர்மை தவறாதே.
14. படிப்பு நிறுத்தப் பணியில் ஈடுபடாதே.
15. ஆசிரியர் பெற்றோர் ஆணைக்குக் கீழ்ப்படி.
16. பொய், களவு, வன்சொல் புறக்கணி.
17. ஒழுக்கம் விழுப்பம் தருமெனக் காண்.
18. உன்னைப்போல் பிறரையும் நேசி.
19. உள்ளத் தூய்மை உயர்வு தரும் என்றறி.
20. உடற்பயிற்சி செய்து உடலைப் பேணு.
21. சுற்றுப் புறத்தையும் சுத்தமாய் வை.
22. நல்லாரைத் தேர்ந்து நட்புக் கொள்.
23. நாட்டுக்கு இயன்ற தொண்டுகளாற்று.
24. இரவில் படித்து இல்லப் பயிற்சிகள் செய்.
25. இறையைத் தொழுது இன்பமாய்த் தூங்கு.

—எம். குமாரதாஸ்,
கரும்பாட்டூர்,
சுவாமிதோப்பு அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.



# குழந்தை

சகிப்புத் தன்மையுடன் வாழும் போது அது பொறுமையுடன் இருக்கக் கற்றுக் கொள்கிறது.

தூண்டுதலுடன் வாழும்போது அது நம்பிக்கையுடன் இருக்கக் கற்றுக் கொள்கிறது.

புகழ்ச்சியுடன் வாழும்போது அது நீதியைக் கற்றுக் கொள்கிறது.

பாதுகாப்புடன் வாழும்போது அது நம்பிக்கைக் கொள்ளக் கற்றுக் கொள்கிறது.

உறுதிப்பாட்டுடன் வாழும்போது அது தன்னைத் தானே விரும்பக் கற்றுக் கொள்கிறது.

ஏற்றுக் கொள்ளும் நட்புடன் வாழும்போது அது உலகில் அன்பைக் காணக் கற்றுக் கொள்கிறது.

வெறுக்கப்படும் சூழ்நிலையில் வாழும்போது அது குறைசொல்லக் கற்றுக் கொள்கிறது.

வெறுப்பினிடையில் வாழும்போது சண்டை போடக் கற்றுக் கொள்கிறது.

கேலிக்கிடையில் வாழும்போது அது வெட்கப்படக் கற்றுக் கொள்கிறது.

அவமானத்துக் கிடையில் வாழும் போது குற்ற உணர்வு ஏற்படக் கற்றுக் கொள்கிறது.

# தேர்வு எழுதுவது எப்படி?

1. முதலில் எக்கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும் என்று தெரிந்தெடுங்கள். அவை உங்களுக்கு நன்கு தெரிந்தவைகளாக இருக்கட்டும். அவற்றிலும் உங்களுக்கு நன்கு விடை தெரிந்த வற்றை முதலில் எழுதுங்கள்.

2. உங்கள் கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும். கோணல் மாணல் கிறுக்கல் தவிர்க்கப்பட வேண்டும்.

3. விடை மிக நீளமாகவோ, சுருக்கமாகவோ இருக்கலாகாது. கேள்விக்குத் தக்கவாறு அமைய வேண்டும்.

4. கட்டுரைகளைப் பத்திகளாகப் பிரித்துக் கொண்டு எழுதுங்கள். ஒவ்வொரு பத்தியிலும் ஒரு கருத்தினைத் தெரிவிக்கலாம். கருத்துத் தொடர்ச்சி பராமரிக்கப்பட வேண்டியது அவசியம்.

5. மையக் கருத்துக்களைத் தவறாது தெரிவியுங்கள்.

6. உங்களது மொழி நடை தெளிவாகவும், இலக்கணப் பிழையற்றும் இருக்க வேண்டும். கருத்துக்களை வெளிப்படுத்தும் ஆற்றல் மதிப்பீட்டாளரைக் கவரும் வண்ணம் அமைய வேண்டும்.

7. உங்கள் கருத்துக்களைத் தர்க்க ரீதியாக விவாதித்து நிலை நாட்டுங்கள்.

8. மறைபொருள் தொடர்கள், சொற்றொடர்கள், மூதுரைகள் ஆகியவற்றை ஏற்றபடி கையாளுங்கள்.

9. தேவையான விவரங்களையும், புள்ளி விவரங்களையும் தக்க இடத்தில் அளியுங்கள்.

10. முடிவில் விவாதித்த கருத்துக்களைச் சுருக்கமாக எழுதுங்கள்.


11. நீங்கள் அனைத்துக் கேள்விகளுக்குமே முழுக் கவனத்தோடு விடை தாருங்கள்.

—"தேர்வுகளில் வெற்றிபெற தெளிவான யோசனைகள்" என்னும் நூலிலிருந்து.

# எங்கள் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் உற்பத்தியாளர்

**B. M.** சில்க்ஸ்
249, காந்தி ரோடு,
காஞ்சிபுரம்-631 501
தொலைபேசி எண். 2970



# தைப்பாவை



## கவிஞர் கண்ணதாசன்

எந்தமிழர் கோட்டத்
திருப்பார் உயிர்வளர

எந்தமிழர் உள்ளத்
தினிமைப் பொருள்மலர

எந்தமிழர் கைவேல்
இடுவெங் களஞ்சிவக்க

எந்தமிழர் நாவாழ்
இளமைத் தமிழ்செழிக்க

எந்தமிழர் இல்லத்
திலங்கும் ஒளிவிளங்க

முந்துதமிழ்ப் பாவாய்
முன்னேற்றந் தான்தருவாய்

தந்தருள்வாய் பாவாய்
தைவடிவத் திருப்பாவாய்

வந்தருள்வாய்! கண்ணால்
வாழ்த்துரைப்பாய் தைப்பாவாய்!

எங்கள் சமுதாயம்
ஏழா யிரமாண்டு

திங்கள்போல் வாழ்ந்து
செங்கதிர்போல் ஒளிவீசும்

மங்காத போர்க்களத்தும்
மாளாத வீரர்படை

கங்குல் அகமென்றும்
காலைப் புறமென்றும்

பொங்கி விளையாடிப்
புகழேட்டிற் குடியேறி

தங்கி நிலைத்துத்
தழைத்திருக்கும் காட்சியினைக்

கண்காண வந்த
கலைவடிவே நித்திலமே

பொங்கற்பால் பொங்கிப்
பூவுதிர்ப்பாய் தைப்பாவாய்!

அன்னங்கேள்! ஞானம்
அருள்வானை முன்னிறுத்தி

முன்னங்கால் சேர்த்து
முழந்தாளில் மண்டியிட்டு

தன்னங்கை கூப்பித்
தலைசாய்த்து யான்வணங்க

என்னங்கேள் ஈசன்
எனக்களித்தான் மெய்ஞ்ஞானம்

இன்னங்கே வென்றான்
எவை கேட்பேன் இன்னமுதே!

பொன்னங்கோன் செம்பரிதி
பூத்தெழுங்கீழ் வானத்தே

அன்னங்கை காட்டும்
அருள்போதும் என்றுரைத்தேன்

மின்னுங்கீழ் வானில்
விரைந்தெழுவாய் தைப்பாவாய்!

# வளரும் வேளாண்மை

## நிலக்கடலையில் அதிக விளைச்சலுக்கு நுண்ணுயிர் உரம்

தமிழ்நாட்டில் நிலக்கடலை மானாவாரியாகவும், இறவைப் பயிராகவும் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. நிலக்கடலையின் வேர்களில் ரைசோபியம் என்னும் நுண்ணுயிர் வேர் முடிச்சுகளை ஏற்படுத்தி, காற்றிலுள்ள தழைச்சத்தை நிலைப்படுத்துவதால், நிலக்கடலையின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் பெரும்பகுதியான தழைச் சத்து கிடைக்கிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கடந்த பல வருடங்களாக திறன்மிக்க ரைசோபிய நுண்ணுயிர்களைக் கண்டுபிடிக்கும் ஆய்வு நடைபெற்று வருகிறது. நிலக்கடலை அதிகமாகப் பயிரிடப்படும் மாவட்டங்களில் இருந்து ரைசோபியம் நுண்ணுயிர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில், டி.என்.ஏ.யூ. 14 என்னும் ரைசோபிய நுண்ணுயிர் அதிக தழைச் சத்தை நிலைப்படுத்தும் திறனுடையதாக அறியப்பட்டது.

கடந்த ஐந்து வருடங்களாக கோவை, ஆழியார்நகர் மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளில் இந்த ரைசோபிய நுண்ணுயிரை கோ.1, கோ.2, கே.எல்.24, ஆகிய நிலக்கடலை விதையுடன் கலந்து விதைக்கும் போது 16 சதவிகிதம் அதிக மகசூல் தந்துள்ளது.

நிலக்கடலைக்கான ரைசோபிய நுண்ணுயிர்கள் ஒரு பாக்கெட் ரூ.2 என்ற விலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிர்ப் பிரிவில் கிடைக்கிறது. ஒரு எக்டருக்குத் தேவையான விதையுடன் கலப்பதற்கு 3 ரைசோபிய பொட்டலங்கள் (600 கிராம்) தேவைப்படும்.

## ஐப்பசி அடைமழையில் விதைக்க ஏற்ற மேய்ச்சல் நிலப்புல்

''ஐப்பசியில் அடைமழை'' என்பது பழமொழி. இந்த மழையைக் கொண்டு பயிர்கள் செழித்து வளரும். இந்த ஐப்பசியில் கோ.1 என்ற நீலக் கொழுக்கட்டைப் புல் ரகத்தை மானாவாரியாக மேய்ச்சல் நிலங்களில் விதைப்பதற்கு இதுவே தகுந்த தருணமாகும்.

இந்த ரகத்தில் 9.06 விழுக்காடு புரதமும், 41 விழுக்காடு மாவுச்சத்தும் மற்றும் 0.58 விழுக்காடு சுண்ணாம்புச் சத்தும் உள்ளன.

நிலத்தை நன்கு பண்படுத்தி, அதாவது இரண்டு, மூன்று முறை உழவு செய்து 16 கிலோ மணிச்சத்து, 8 கிலோ சாம்பல் சத்து இட்டு, விதைகளை மண்ணுடன் கலந்து தூவி, உழவிட்டு, மூட வேண்டும். ஒரு ஏக்கர் நிலத்திற்கு 3 கிலோ விதை தேவைப்படும். இப்போது பெய்யும் மழையில் இந்தப் புல் ரகம் நன்கு முளைத்து வேர் ஊன்றி விடும். விதைத்த 70-75 நாட்களில் முதல் அறுவடைக்கு/மேய்ச்சலுக்கு ஏற்றதாக இருக்கும். பின்னர் மழையைப் பொருத்தும், பயிரின் வளர்ச்சியைப் பொருத்தும் வருடத்தில் 4-லிருந்து 6 அறுவடை/மேய்ச்சல் செய்யலாம். ஆண்டிற்கு 4-லிருந்து 6 அறுவடை/மேய்ச்சலில் ஏக்கருக்கு 16 டன் பசுந்தீவனம் கிடைக்கும். விதை விவரத்திற்கு தீவனப்பயிர்த்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை அணுகவும்.

---

**சமதர்மம் வேறு; சமத்துவம் வேறு; சமதர்மம் என்பது பொருளாதாரத் துறையில் ஏற்றத் தாழ்வற்ற நிலை வேண்டும் என்பது; சமத்துவம் என்பது, மனிதனுக்கு மனிதன் வேறுபாடு காட்டுகின்ற நிலை ஒழிந்து தீரவேண்டும் என்பது!**

**— முதல்வர் கலைஞர்**

---

## மானாவாரியில் கலப்புப் பசுந்தீவனம்

காங்கேயம், தாராபுரம், பல்லடம் போன்ற பகுதிகளில் அதிகமாக மேய்ச்சல் நிலங்கள் உள்ளன. அவைகளில் கொழுக்கட்டைப் புல் ரகங்கள் பயிரிடப்பட்டு, நல்ல காங்கேயம் ரகக் காளைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வருவது யாவரும் அறிந்த ஒன்று. இந்தக் கால்நடைகள் மிகவும் திடகாத்திரமாக வும், எலும்புகள் உறுதியாகவும் இருப்பதுடன் பாரம் சுமப்பதற்கு ஏற்றதாகவும் இருப்பது யாவரும் அறிந்ததே.


கொழுக்கட்டைப் புல்லை மட்டும் தின்று நல்ல திடகாத்திரமான காளைகளை உற்பத்தி செய்யும் காங்கேயம் பகுதிகளில் மழைக் காலங்களில், கொழுக்கட்டைப்புல் விதையுடன் முயல் மசால் என்னும் ஒருவகை பயறுவகைத் தீவன விதைகளை ஒரு மீட்டர் இடைவெளியில் வரிசையில் விதைத்து கொழுக்கட்டைப் புல்லும், முயல்மசால் செடிகளும் நன்கு வளர்ந்தபின் கால்நடைகளை விட்டு மேய்த்தால் நல்ல புரதச்சத்து மிகுந்த பசுந்தீவனம் கிடைப்பதுடன் கொழுக்கட்டைப் புல் போன்றே வறட்சியையும் மேய்ச்சலையும் தாங்கி வளர்ந்து, நல்ல திடகாத்திரமான மாடுகளையும், காளைகளையும் கொடுக்கக்கூடியது.

இந்த முயல்மசால் பயிரில் 16 விழுக்காடு புரதமுள்ளதால் கால்நடைகளுக்குத் திடவுணவிற்குச் செலவு செய்யும் தொகையும் மீதமாகும். இப்பயிர் தனிப்பயிராக மானாவாரியில் 30 டன் 1 எக்டருக்கு 4-லிருந்து 6 அறுவடை/மேய்ச்சலில் மகசூல் தரவல்லது. ஊடுபயிராக 8-லிருந்து 10 டன் வரை பசுந்தீவனம் ஒரு எக்டரில் தரவல்லது. ஆகையால் காங்கேயம் காளைகளை உற்பத்தி செய்யும் வேளாண் மக்கள் ஊடுபயிரிட்டுப் பயன்பெற வேண்டுகிறோம். மேலும் எல்லாவிதமான மானாவாரி நிலங்களுக்கும் இது ஏற்றது.

**வெளியீடு:**
வேளாண் தகவல் பணிமையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோவை-641 003.

## வேளாண்மைப் பல்கலைக் கழக

## மாணவர்களின் சாதனை



தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகம் இந்தியாவின் பதினான் காவது பல்கலைக் கழகமாக 1971-இல் உதயமானது. இப்பல்கலைக் கழகம் வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி, விரிவாக்கம் ஆகிய மூன்று தாரக மந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு, உழவர் பெருமக்களுக்கு உற்ற நண்பனாகப் பணியாற்றி வருகிறது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் அகில இந்திய அளவில் நடத்தப்பட்ட தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன. அம்முடிவுகள் இப்பல்கலைக் கழகத் தின் சிறப்பை உயர்த்தும் வகையில் அமைந்துள்ளன.

வேளாண்மைக் கல்வியின் பல பாடங்களில் அகில இந்திய முதலிடத் தைத் தக்க வைத்துக் கொண்டதோடல் லாமல், மொத்த இடங்களில் 35 சத வீதம் பெற்று, இந்தியாவிலேயே முதல் பல்கலைக்கழகமாக இப்பல்கலைக் கழகம் திகழ்கிறது என்பது பெருமைப் படத்தக்க செய்தி. இந்த, இளநிலை ஆராய்ச்சித் தேர்வில் முதல் இடம் பெற்ற மாணவ மாணவிகளின் பெயர் களும், சார்ந்த பாடங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| வேளாண் விரிவாக்கம் | : | என். சாதனா |
| வேளாண் பொருளாதாரவியல் | : | பி.டி. உமாசங்கர் |
| வேளாண் பொறியியல் | : | ரமேஷ் |
| விதை நுட்பவியல் | : | என்.எஸ். ராதா |
| பூச்சியியல் | : | கீதாஞ்சலி |
| நுண்ணுயிரியல் | : | பிந்து |
| தேயிலை விஞ்ஞானம் | : | ஆர். செல்வம் |

இம்மாணவர்கள் சீரிய முயற்சி யினால் முதல் இடங்களைப் பெற்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கும், தமிழ் மண்ணுக்கும் மறக்க முடியாத இமாலயப் பெருமை யைத் தேடித்தந்திருக்கிறார்கள். இவர் களை மனமுவந்து பாராட்டுவோம்!

**வேளாண் தகவல் பணிமையம்**
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்—641 003.


*1990-ஆம் ஆண்டு பொங்கல் நன்னாளில்*
*எங்களது நல்வாழ்த்துக்கள்*

# ஸ்ரீவரதராஜஸ்வாமி பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட். எண்.ஜி. 2105.

**437 காந்திரோடு, காஞ்சிபுரம் 531 501**

தொலைபேசி எண்: 2627

**கிளைகள்:**

1. 238-பி. 2-வது அக்ரஹாரம், சேலம்-1.
2. 323, ராஜவீதி, கோயமுத்தூர்-1
3. 84, பி.வி.கே. ஐயங்கார்ரோடு, பெங்களூர்-53
4. உம்மிடியார்ஸ் ஷாப்பிங்சென்டர், சென்னை-2.
5. 4 மசூதி வீதி, அருண்டல்பேட், விஜயவாடா
6. 15-3-422 மெயின்பஜார், இந்துப்பூர்.
7. லஷ்மி விலாஸ், லஷ்மிவிலாஸ் பில்டிங், கே.ஆர். சர்க்கிள்.
8. 137, கீழவெளி வீதி, மதுரை-1.

குறிப்பு: நவநாகரீகத்திற்கேற்ப பண்டிகை மற்றும் திருநாள், திருமணகாலங்களுக்கேற்ற புத்தம் புதிய வண்ணங்களில் நவீனவடிவமைப்புகள் கொண்ட பட்டு சேலைகள் தயாரித்து வழங்கும் மிகச் சிறந்த கூட்டுறவு நிறுவனம்.

*வருகைதாரீர்!* *ஆதரவுதாரீர்!* *பயனடைவீர்!*

**கே. சண்முகசுந்தரம்,**
இணை இயக்குனர்/தனிஅலுவலர், கூடுதல்பொறுப்பு




# புதுத்தை வந்தது!

கவிஞர் வாணிதாசன்

கீழ்த்திசைக் கிளர்ந்தெழு பரிதி கண்டனம்!
வாழ்த்தினம் வந்த தை! மக்கள் வாழ்த்தினம்!
ஆழ்கடல் ஒலியொடு பொங்கல் ஆர்ப்பொலி
சூழ்ந்திட, இன்பமும் வாழ்வும் சூழ்ந்ததே!

பாரினில் விண்ணிடைப் பரிதி கண்டனம்!
ஊரினில், ஊரிடை உள்ள வீட்டினில்,
நீரினில், நீரிடை நிலவு பூக்களில்,
ஏரினில், ஊனுடல் எங்கும் இன்பமே!

வாடையை ஓட்டியே வந்த தைமுதல்
ஆடலும் பாடலும் அயரும் கன்னியர்
ஏடவிழ் கண்மலர் கண்டு காளையர்
தேடிய பொங்கலின் செந்தேன் என்பரே!

பொன்னொளி கண்டனம்! புதுத் தை வந்தது!
தென்னவர் வாயெலாம் பொங்கல் வாழ்த்தொலி!
மின்னொளி வாய்மொழிச் சுவையே மிக்கெனக்
கன்னலைக் கடிப்பவர் கவிதை யாப்பரே!

செங்கரும் பொடித்துணும் பிள்ளைச் செவ்விதழ்
'செங்கரும் பா' மெனச் செப்பும் சேயிழை
துங்க விழிமொழி துய்க்கும் கேள்வரும்
'பொங்கலைப் போன்றவர் புதல்வர்' என்பரே!

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்:-

# ஏழைகளை வாழவைக்கும் புரட்சித் திட்டம்



திருமதி பீரப்பா தன் கணவருடன்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் ஏராளமான ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் பயனடைந்து வருகிறார்கள்.

இந்தத் திட்டம் அருமையான திட்டம் என்றும், ஏழைகளை வாழ வைக்கும் நல்ல திட்டம் என்றும், இதனால் பயனடைந்தோர் கூறி வரு கிறார்கள்.

அந்த வகையில், இத் திட்டத்தினால் பயனடைந்த சிலரைப் பேட்டி கண்டோம். அப்போது அவர்கள் கூறியதாவது:

மதுரை மாவட்டம் புதுவிளாங்குடி கிராமத்தைச் சேர்ந்த காளிமுத்து ஒரு லாட்ஜில் ரூ.250 மாதச் சம்பளத்தில் வேலை செய்து, தன் குடும்பத்தை நடத்தி வருகிறார். அவர் கூறுகிறார்:

''இந்தச் சொற்ப சம்பளத்தில் தன் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்ய எண்ணுவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல் என்று எண்ணி இருந்தேன். ஆனால் தமிழக முதல்வர் படித்த ஏழைப் பெண் களுக்குத் திருமண உதவித் திட்டத்தை அறிவித்துள்ளார் என்பதை அறிந்த பின்புதான், என் மகளுக்கும் திருமணம் செய்ய முடிவு செய்தேன். இருந்தாலும் இத்திட்டத்தின் பயனை நாம் அடையும் முன்பு பல சிரமம் இருக்குமே என்று நினைத்து மலைத்தேன். நான் எங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலரை அணுகி மனுச் செய்தேன். என் மனு பரிசீலிக்கப்பட்டு வட்டாட்சியர் அலு வலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இரண்டே நாளில் முடிவு செய்யப் பட்டு, மூன்றாவது நாளில் திருமண நிதியுதவியை முழுமையாகப் பெற் றேன். இந்தத் திட்டத்தின் மூலம் பயன் அடையும் என்போன்ற ஏழை எளிய மக்களின் நெஞ்சங்கள் வாழ்த்திக் கொண்டேயிருக்கும்.

கம்பத்தைச் சேர்ந்தவர் சாகுல் அமீது இவருக்கு வயது 63 ஆகிறது. பல ஆண்டுகளாக பலசரக்கு வியாபாரம் செய்து வந்தார். பிறகு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு தொழில் செய்யாமல் விட்டுவிட்டார். தற்போது லாட்டரிச் சீட்டுகள் விற்கிறார். இவருக்குத் தினசரி 10 ரூபாய் வரு மானம் கிடைக்கிறது. இவருக்கு இரண்டு மகள்கள். மூத்த பெண் ணுக்குத் திருமணம் நடந்து விட்டது.

## பயன் அடைந்தோர் பகர்வன:

2-வது பெண் பீரப்பா என்ற 27 வயது மகள். இவருக்குத் திருமணம் செய்ய முயன்று பண வசதியின்றி கஷ்டப்பட்டார். அதனால்தான் எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்க வைத்து தன் மகளுக்கு 27 வயது ஆகியும் திருமணம் செய்து வைக்கமுடியாத நிலை ஏற்பட்டது. தற்போது முதல்வர் அவர்கள் அறிவித்த மூவலூர் இராமா மிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின் கீழ், ரூபாய் 5,000 நிதியுதவி பெற்று, திருமணத் தைச் சிறப்புற நடத்தினார். அவரது மகள் திருமதி பீரப்பா கூறுகிறார்:

''எங்கள் குடும்பம் மிகவும் ஏழ்மை யான குடும்பம். என்னைப் போன்ற ஏழைப் பெண்கள், வயது ஆகியும் திருமணம் செய்ய வழியில்லாமல் உள்ளவர்களுக்கு முதல்வர் கொண்டு வந்துள்ள இந்தப் புதிய திட்டம் புரட்சி கரமானதாகும். அதனால் நாங்கள் வாழ்வு பெற்றோம்''

மதுரை மாவட்டம், பரசுராம் பட்டியைச் சேர்ந்த அந்தோணிராஜ் - மேரிபாக்கியம் தம்பதியினருக்கு 6 பெண்களும், 2 ஆண்களும் உள் ளனர். 50 வயதுடைய அந்தோணி ராஜ் கூலி வேலை செய்து தன் குடும்பத்தை நடத்தி வருகிறார். இவர் மனைவியும் இவருடன் சேர்ந்து கூலி வேலை செய்கிறார். இவர்கள் வறு மைக்கோட்டிற்குக் கீழ் உள்ள நிலை யில், குடும்பம் நடத்த இயலாத நிலை யிலும் தன் மூத்த மகளான எலிசபெத்தை 8-வது வரைக்கும் படிக்க வைத்து தையற் பயிற்சியும் பயில வைத்



திருமதி எலிசபெத் தன் கணவருடன்

துள்ளார். மற்ற பிள்ளைகளில் இரண்டு பெண்களைப் படிக்க வைக்க முடியாத நிலையில் கூலி வேலைக்கு அனுப்பியுள்ளார். அவர் கூறுகிறார்:

"என் பெண்ணிற்குத் திருமணம். செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருந்தேன். படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டத்தின் மூலமாக ரூ.5,000 உதவி என்பதைப் பத்திரிக்கை வாயிலாக அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். அதன்பின் 23 வயதுடைய என் பெண்ணிற்கு திருமணம் செய்ய நிச்சயித்து மதுரை மாவட்டம் போடியைச் சேர்ந்த செபாஸ்டியனுக்குத் திருமணம் செய்து கொடுத்தேன். தமிழ்நாட்டில் உள்ள ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒவ்வொரு பெண்ணும் தனக்கு நிச்சயம் திருமணம் நடைபெறும், தாங்களும் மற்றவர்களைப் போல் சமுதாயத்தில் வாழ முடியும் என்ற தன்னம்பிக்கையை இத்திட்டம் ஏற்படுத்தியுள்ளது. பணம் இல்லாத ஒரு குறையைத் தவிர மற்ற குறையேதும் இல்லாத என் மகள் போன்ற தமிழ்நாட்டில் உள்ள அத்தனை படித்த ஏழைப் பெண்களும் தமிழக முதல்வரின் இத்தகைய சீரிய திட்டத்தினால் பயன் பெறுகிறார்கள். இதுவரை இந்தியாவிலேயே, எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு உன்னதமான திட்டத்தைத் தமிழக முதல்வர் செய்துள்ளார்."

சின்னமனூரில் வசிக்கும் ஆதி-திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் பகவதி-அய்யம்மாள் தம்பதியினர். பகவதி விவசாயத்திற்குப் பூச்சிமருந்து அடிக்கும் தொழில் செய்து வருகிறார். இவருக்கு இரண்டு மகன்களும், ஒரு மகளும் உண்டு. இவரது ஒரே மகள் தமிழரசி; வயது 20 ஆகிறது. 10-வது வரை படித்துள்ளார். வசதியில்லாத காரணத்தால் மகளின் திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார்.

இத்திட்டம் பற்றி திருமதி தமிழரசியிடம் கேட்டபோது, "என்னைப் போன்ற இல்லாத வீட்டுப் பெண்களுக்கு, அரசின் இந்தப் புதிய திட்டம் மிகவும் உதவியாய் உள்ளது" என்றார்.

இத்திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்திற்கு 415 பேர்களுக்கு நிதி வழங்க ரூபாய் 20.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்ட சமூகநலத்துறை, இதுவரை 327 பேர்களுக்கு ரூ.16 இலட்சத்து 35 ஆயிரம் வழங்கி சாதனை செய்துள்ளது.

ரெ. இராவணன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
மதுரை மாவட்டம்

திருமதி தமிழரசி தன் கணவருடன்



## தென் ஆர்க்காடு மாவட்டத்தில்

தென் ஆர்க்காடு மாவட்டம் சங்கராபுரத்தைச் சேர்ந்தவர் தா. உஷா என்பவர். இவர் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். இவரது தந்தை தாசப்பன் சிறிய பெட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார். திருமதி உஷா கூறுகிறார்:

"நான் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். எனது தந்தையார் சிறிய பெட்டிக்கடை வைத்து, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில், என்னுடன் பிறந்த 3 குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டிய ஏழ்மை நிலையில் எங்களது குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார். எனக்குத் திருமணம் கடந்த அக்டோபர்



திருமதி தா. உஷா

5-ந் தேதி நிச்சயிக்கப்பட்டு இருந்தது. திருமணச் செலவுக்கு எங்கு, யாரிடம் கடன் வாங்குவது என்று கஷ்டப்பட்டோம். அந்த சமயத்தில், திருமணத்திற்கு உதவி செய்வதாக அரசு செய்திருந்த விளம்பரத்தைப் பார்த்து எங்கள் ஊரைச் சேர்ந்த முக்கிய சேவிகாக்கள் மூலம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களை அணுகினோம். அவரும் எங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தந்து, 'மாவட்ட சமூகநல அலுவலர் மூலமாக உங்களுக்குப் பண உதவி கிடைக்கும்' என்றார். அதன்படி, நாங்கள் மனு செய்த 20 நாட்களில் எங்களுக்குப் பணமும் கிடைத்தது. என்னைப் போன்ற படித்த ஏழைப் பெண்களுக்கு அரசு செய்து வருகின்ற இந்தப் பேருதவிக்கு நாங்கள் என்னென்றும் அரசுக்குக் கடமைப்பட்டு உள்ளோம்."



### திருமதி பானுமதி

தென் ஆர்க்காடு மாவட்டம் நல்லூர் ஊராட்சி ஒன்றியம் பெண்ணாடத்தைச்சேர்ந்தவர் பி. பானுமதி என்பவர். இவர் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர். இவரது தந்தை மாவு அரைக்கும் நிலையத்தில் கூலித்தொழிலாளியாகப் பணி புரிந்து வருகிறார்.

இத்திட்டம் பற்றி திருமதி பானுமதி கூறும்போது, ''சொற்ப வருமானத்தில் எனது தாய், எனது உடன் பிறந்த 5 பெண்கள், 2 தம்பிகள் அனைவருமே குடும்பத்தை நடத்தி வந்தோம். என்னைப் போன்ற ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண்களுக்கு இந்தத் திட்டம் ஒரு வரப்பிரசாதம். நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க, பெண்களின் வாழ்வில் மறு மலர்ச்சி அடைந்திட ஒரு நல்ல திட்டத்தில் விண்ணப்பம் கொடுத்த 15 நாளில் பணம் கிடைத்தது. இத்திட்டத்தின் மூலம் படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் மேலோங்கி வருகிறது'' என்றார் மகிழ்ச்சியுடன்.

நா. தில்லைகோவிந்தன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தென் ஆர்க்காடு மாவட்டம்
கடலூர்.



# தெய்வதம் மலருதடி

## கவிஞர் ப. கோவிந்தராசு

சித்தம் இனித்திட நித்தம் மகிழ்ந்திட
திருநாள் வருகுதடி-வளர்
புத்தமிழ் வாழ்த்துகள் பொழிந்திடும் தையினிற்
பூரிக்கப் பொங்குதடி!


கரும்புடன் மஞ்சள் கனிகளும் தீம்பால்
கவினுறக் குவியுதடி-மக்கள்
விரும்பும் சமதை, விஞ்ஞானப் புதுமை,
விரிபயன் விளைக்குமடி!

மக்கள், மாக்கள் உழைப்பினை நன்றிசேர்
மனங்கொளப் போற்றுமடி!-உலகில்
தக்கபல் தொழில்வளம் செழுங்கலை நுட்பமும்
தழைத்திடச் சாற்றுமடி!

உழைக்கும் வர்க்கம் துய்த்தே உயர்ந்திட
உயரறம் விளக்குதடி!-நலம்
தழைக்கும் பொதுமையில் தன்னலம் துறந்திடத்
தரணியே செழிக்குமடி!

ஓர்குலம், ஓரினம் உன்னத ஒருமையும்
ஓங்கிடச் சுடருமடி!-உயர்
வேரெனும் மானிடம் விளங்கிடும் நேயத்தில்
விரிபயன் படருமடி!

பார்மிசை யாவரும் பணிசெயத் தோய்ந்திட
பன்னலம் மிளிருதடி!-தவத்
தேரென அருள்வலம் திக்கெலாம் நடந்திடத்
தெய்வதம் மலருதடி!



# செங்கை அண்ணா மாவட்ட பேருந்து உரிமையாளர்கள் சங்கம்,

பதிவு எண்: 45/1985

## நெ.54, நெல்லுக்காரத் தெரு, காஞ்சிபுரம் 631 502



தமிழகம் முழுவதும் மகிழ்ந்து கொண்டாடும் இத்தமிழ்த் திருநாளில் எங்களுக்கு நல்லாதரவு அளித்து எங்களை ஊக்கப்படுத்தி வரும் பயணிகளுக்கும், ஏனைய பொதுமக்களுக்கும் எங்களது உளங்கனிந்த ''பொங்கல் நல்வாழ்த்துக்கள்''

'மக்களின் சேவையே மகேசன் சேவை' என்ற உயரிய குறிக்கோளின்படி பயணிகளின் பயணம் இனிது அமைய பழைய பேருந்துகளுக்குப் பதிலாகப் புதிய, புதிய பேருந்துகளை விட்டு, பயணிகள் மனம் மகிழச் செய்கின்றோம்.

இம்மாவட்டத்தில் நல்ல முறையில் பேருந்துகளை வைத்து, பயணிகள் பாராட்டும் வண்ணம் செயலாற்றி நற்பணிகள் ஆற்றி வருகின்றோம்.

தமிழக அரசு தரும் பொன்னான வாய்ப்புகளைப் பயன்படுத்தி அரசு ஒத்துழைப்புடன் எங்களது சேவைகளைத் தொடர்ந்து ஆற்றுவோம் என்று அனைவர்க்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## சங்கம் ஆற்றி வரும் பொதுநலப் பணிகள்

1. காஞ்சிபுரம், திருத்தணி பேருந்து நிலையங்களில் பயணிகளின் குடிநீர் வசதிக்காக ரூ.50,000/-க்கு மேல் செலவு செய்து குளிர்சாதனப் பெட்டி அமைத்துத் தொடர்ந்து பராமரித்து வருகின்றோம்.
2. ஆண்டுதோறும் ''ஜூனியர் ரெட்கிராஸ்'' நடத்தும் முகாமில் 120 பேர்களுக்குப் பரிசுகள் வழங்கி வருகின்றோம்.
3. பள்ளிகளில் போக்குவரத்து விதிகளைப் பற்றிப் போதனை செய்து போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கி வருகின்றோம்.
4. சமூகநலத்துறை நடத்தும் உடல் ஊனமுற்றோர் உலக நாள் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் ஊனமுற்ற மாணவ, மாணவிகட்குத் தேவையான பொருள்களை அன்பளிப்பாக அளித்து வருகின்றோம்.
5. காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனை, குழந்தைகள் நலப் பிரிவுக்காக வேண்டிய சாதனங்களையும், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத் தேவையான தொலைக்காட்சிப் பெட்டியும் அளித்துள்ளோம்.

மேலும் இதுபோன்ற பற்பல மக்கள் சேவையைத் தொடர்ந்து செய்து வருகின்றோம் என்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**''மக்கள் சேவையே, மகேசன் சேவை''**

**செங்கை அண்ணா மாவட்ட பேருந்து உரிமையாளர்கள் சங்கம்**

| ஏ.எம். முனுசாமி முதலியார் | டி. முத்துசாமி | பி. இராதாகிருஷ்ணன் |
|---|---|---|
| *தலைவர்* | *செயலாளர்* | *பொருளாளர்* |

*மற்றும் அனைத்து உறுப்பினர்களும்*

# உலக எழுத்தறிவு ஆண்டு

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர்
**டாக்டர் க. அன்பழகன்**

**1990** ஆம் ஆண்டினை உலக எழுத்தறிவு ஆண்டாக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அறிவித்துள்ளது. கல்லாமை உலகந் தழுவிய ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. மக்கள் நலனுக்கும் நாடுகளின் முன்னேற்றத்திற்கும் எழுத்தறிவு இன்றியமையாததாகும். அரசு செயல்படுத்தும் பல வளர்ச்சித் திட்டங்களின் பலன்களை மக்கள் அடைய முடியாமல் போவதற்கு ஒரு முக்கிய காரணம் எழுத்தறிவின்மையாகும். இன்றைய உலகில் பெரும்பாலும் எழுத்து மூலமாகச் செய்திகள் பரிமாறிக் கொள்ளும் நிலையில் எழுத்தறிவு என்பது வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு திறன் ஆகும். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்!'

ஆனால் இன்று உலகில் கல்லாதோர் எண்ணிக்கை 90 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது மக்களில் நான்கில் ஒரு பங்கிற்கு (1/4) மேல் கல்லாதவர்கள். பெண்களில் எழுத்தறிவு நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவர்களில் மூன்றில் ஒருவர் கல்லாதவர். உலகில் 9 நாடுகளில் ஒவ்வொன்றிலும் 10 கோடிக்கு மேற்பட்டவர்கள் கல்லாதவர்கள். இந்தியா அதில் ஒன்று. பலதரப்பட்ட திட்டங்கள் வாரியாக முயற்சிகள் செய்ததன் பலனாக கற்றோர்கள் சதவிகிதத்தை உயர்த்திட நம்மால் முடிந்துள்ளது. மக்கள் தொகை பெருகுவதால் கல்லாதவர்கள் எண்ணிக்கையும் நாள்தோறும் கூடிக்கொண்டே வருகிறது என்பது ஓர் உண்மையாகும். ஆகையால் எழுத்தறிவின்மையை நீக்கப் போர்க்கால அடிப்படையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவேதான் இந்த ஆண்டு உலக எழுத்தறிவு ஆண்டு என அறிவிக்கப் பட்டுள்ளது.

## உலக எழுத்தறிவு ஆண்டின் நோக்கங்கள்

எழுத்தறிவின்மையின அளவு, தன்மை, விளைவுகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தல்

—மக்களை ஒன்று திரட்டி - பங்கேற்கச் செய்தல்

—கல்லாமையை மாற்றிடும் முயற்சிக்குத் தேவையான வளங்களை அரசு மற்றும் பிற நிறுவனங்கள் வாயிலாகத் திரட்டல்

-பெண்களுக்குக் கல்வி வழங்குவதில் தனிப்பட்ட சில பிரச்சினைகளும் தேவைகளும் இருப்பதால் பெண் கல்விக்கான செயல்பாடுகளை அதிகரித்தல்

—கல்லாமைக்கெதிரான போராட்டத்தில் உலகளாவிய செயல்பாடுகளைத் தீவிரப்படுத்துதல்

-கி.பி.2000-ஆம் ஆண்டுக்குள், கல்லாமை நிலையை ஒழித்திட நமது முயற்சிகளைத்தீவிரப்படுத்துவதும் விரிவாக்கம் செய்வதும்

மேற்குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் இந்திய அரசும் தமிழக அரசும் பல திட்டங்களை வகுத்துள்ளன.


## இந்தியாவின் நிலை

1981-இல் இந்தியாவில் கற்றோர் சதவிகிதம் 36.23 ஆகும். 30 ஆண்டுகளில் இருமடங்காகக் கற்றோர் ஆயினர். இது 1951-இல் இருந்ததைவிட 19.56 சதவிகிதம் அதிகமாகும். கற்றோரின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் மக்கட்தொகைப் பெருக்கத்தின் காரணமாக கல்லாதோர் எண்ணிக்கையும் 30 கோடியிலிருந்து 40 கோடியாக அதிகரித்துள்ளது.

## தமிழகத்தின் நிலை

1981-இல் தமிழ்நாட்டில் கற்றோர் சதவிகிதம் 47 சதவிகிதம் ஆகும். 1951-ஆம் ஆண்டில் பிரிக்கப்படாத சென்னை மாகாணத்தில் கற்றோர் சதவிகிதம் 21 ஆகும். 1961-இல் தமிழ்நாட்டில் எழுத்தறிவு சதவிகிதம் 31 ஆகும்.

தமிழகத்தில் எழுத்தறிவு நிலையை உயர்த்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வயது வந்தோர் கல்வித் திட்டம் 15-35 வயதுப் பிரிவினருக்காக நடத்தப்படுகிறது. தற்போதுள்ள மக்கள் தொகைப் பெருக்கத்தின் அடிப்படையில் பார்க்



# மாற்றம் சொல்லில் அல்ல - கருத்தில்!



**சொல்லிலே ஏற்படும் மாற்றம் சொல் அளவினதல்ல - கருத்தினுக்குக் கருவியன்றோ சொல்! எனவே, சங்கராந்தி தமிழர் திருநாள் ஆனது, ஒரு பதத்துக்குப் பதில் வேறொன்று என்று ஏற்பட்டதல்ல - ஒரு கருத்து ஒழிந்து பிறிதோர் கருத்து மலர்ந்ததைக் காட்டுவதாகும். அதைப்போலவே, கன்னிகாதானம் - திருமண மாகி, திருமணம் இன்று வாழ்க்கைத்துணை ஒப்பந்தமாகியிருக்கிறது.**

கும்போது கணக்கீட்டின்படி 15-35 வயதுப் பிரிவில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் 1995-இல், அதாவது எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 117 இலட்சம் பேர் இருப் பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் இறுதிவரை வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் பயன் பெற்ற வர்கள் 60 இலட்சமாகும். 1989-90-இல் 10 இலட்சம் பேர் பயனடைவார்கள். மீதமுள்ள 47 இலட்சம் பேருக்கும் 1995-ஆம் ஆண்டுக்குள் எழுத்தறிவு அளிக்கப்பட வேண்டும்.

இந்த இலக்கினை அடைய தமி ழகத்தின் நடுவண் அரசின் உதவியுடன் 8,100 வயதுவந்தோர் மையங்களும், தமிழக அரசின் உதவியுடன் 14,900 மையங்களும் செயல்பட்டு வருகின் றன. மேலும் தொண்டு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், நேரு இளைஞர் மன்றங்கள் மூலமாக 3,700 மையங்களும் செயல்பட்டு வருகின்றன. மக்கள் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் 25,000 நாட்டு நலப் பணித் திட்ட மாணவர் களும் வயதுவந்தோர் கல்விப் பணி யில் ஈடுபட்டுள்ளனர்.

வயதுவந்தோர் கல்விக்காக 1989-90-ஆம் ஆண்டிற்கு மாநில அரசு மூலம் 4.33 கோடி ரூபாயும், நடுவண் அரசு மூலம் 4.32 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 8.65 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

புதிதாகக் கற்றவர்கள் கற்ற எழுத் தறிவை மறந்துவிடாமலிருக்க நடுவண் அரசு உதவியுடன் 700 தொடர்கல்வி மையங்களும், மாநில அரசு உதவி யுடன் 100 தொடர் கல்வி மையங் களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் தொண்டு நிறுவனங்கள் 260 தொடர்கல்வி நிலையங்களை நடத்தி வருகின்றன.

கடலோர மீனவர்களுக்காக டேனிடா உதவியுடன் தமிழக அரசு தனியாக ஒரு வயதுவந்தோர் கல்வித் திட்டத்தை இவ்வாண்டு முதல் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் மூலம் 5 ஆண்டுகளில் 90,000 மீனவர்கள் பயன்பட உள்ளார்கள்.

தமிழகத்தில் படித்த அனைவரும் வயதுவந்தோர் கல்விப் பணியில் ஈடுபட வேண்டும். இதற்காக உலக எழுத்தறிவு ஆண்டான இவ்வாண்டில் செயல்படுத்த பல செயல்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவை:

—ஜனவரி '90 முதல் டிசம்பர் வரை 'உலக எழுத்தறிவு ஆண்டு விழா' மாவட்ட வாரியாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

—உலக எழுத்தறிவு ஆண்டில் எழுத் தறிவின் அவசியம் குறித்துப் பரவலாக விளம்பரம் செய்ய வண்ணச் சுவ ரொட்டிகள், சிறு வெளியீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

—எல்லாக் கல்வி நிறுவனங்களிலும் உலக எழுத்தறிவு விழா கொண்டாட வும், பள்ளி மற்றும் கல்லூரி மாண வர்களை வயது வந்தோர் கல்விப் பணியில் ஈடுபடுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

—வானொலி, தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாட்கள் மூலமாக எழுத்தறி வின் அவசியத்தை எடுத்துக்கூற முழக் கங்கள், ஒருவரிச் செய்திகள் தயாரிக் கப்பட்டுள்ளன.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'

'எழுத்தறிவைப் பரப்புவோம் அறியாமையை விரட்டுவோம்!'

'எழுத்தறியார் கண்ணிழந்தார் எழுத் தறிவோர் அறிவொளி பெற்றோர்!'

'எழுத்தறிவு - பரவப் பரவ மூட நம்பிக்கை குறையும், முன்னேற்றம் விளையும்'

'எழுத்தறிவு - வாழ்விற்கு ஒளி'

'தற்குறிநிலை - வாழ்க்கையில் இருள்'

'எழுத்தறிவு பெறுவீர்! எழுத்தறிவால் திறமை வளரும்!'

வருமானம் பெருகும்! வறுமை விலகும்!' - இதுபோன்ற முழக்கங்கள் பரப்பப்படும்

-அனைத்துப் பத்திரிகைகளிலும் சிறப்பு மலர் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

திட்டப் பகுதிகளில் சிறப்பான முறையில் விழாக்கள், காட்சி அரங்கங்கள், ஊர்வலங்கள், பேரணிகள், கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

—ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் ஒருசில கிராமங்களைத்தேர்வு செய்து 100 சதவிகித மக்களும் எழுத்தறிவு பெற்றிட செயல்திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

எனினும் இப்பணி முழுமைபெற தமி ழகத்தில் படித்த மக்களனைவரும் ஒத்துழைக்க வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள், தொண்டு நிறு வனங்கள், அரசியல் அமைப்புகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், தொழி லதிபர்கள், சுழற் குழுவினர் (Rotary) அரிமா சங்கத்தினர், ஜேசீஸ் குழு வினர், தேசிய வங்கிகள், சமூக நல மகளிர் மன்றங்கள், உள்ளாட்சி, நகராட்சி அமைப்புகள் போன்ற பலதரப்பட்ட அமைப்பில் உள்ள மக்களும், நிறுவனங்களும் ஈடுபாட்டு டன் முயன்றால் தமிழக மக்களின் எழுத்தறிவு நிலை பெரிதும் முன் னேறும் என்பதில் ஐயமில்லை. இதற்கு அனைவரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன். புத்தாண்டில் புத் துணர்ச்சியுடன் செயல்படுவோமாக.

அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்


*(5-1-90 அன்று தொலைக்காட்சி மூலம் ஆற்றிய உரையிலிருந்து)*

# படமும் செய்தியும்



ஈராஸ் இயக்கத் தலைவர்கள் பாலகுமார், சங்கர் முகிலன் ஆகியோர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து உரையாடினர். (7.1.'90)

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில், இலங்கை வட கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜ பெருமாள் அவர்கள் சந்தித்துப் பேசினார். (8.1.1990)





மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள், சென்னை நகரில் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டப் பணிகளைப் பார்வையிட்டார். (4.1.'90)

புகழ் பெற்ற உலகக் குத்துச்சண்டை வீரர் திரு. முகமது அலி அவர்கள், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்தார்கள். (4.1.'90)



# திருக்குறள் திசை காட்டும் சூரியன்

## கவியரசர் இளந்தேவன்


புள்ளிவிழா வெண்ணிலவே!
பூச்சிவிழா ஒளிப்பயிரே!
வள்ளுவமே! உயிர்ப்பயிரை
வாழவைக்கும் வான்மழையே!


ஞானத்தின் பொதுமறையே
நற்றமிழின் ஒருமறையே!
வானத்தைக் கையிரண்டில்
வழங்குகின்ற திருமறையே!

தமிழ்முனிவன் தலை-ஊற்றே!
தத்துவத்தின் தலையூற்றே!
உமிழ்நீரைத் தமிழ்நீராய்
ஊறவைக்கும் உள்ளுணர்வே!

தசைகளுக்குச் சத்துணவே!
சகலருக்கும் புத்தமுதே!
திசைகளுக்குத் திசைகாட்டும்
திராவிடத்துச் சூரியனே!

உனைப் பெற்ற தமிழன்னை
எனைப்பெற்றாள் என்பதனால்
முனைப்புற்றேன்; அவளேஎன்
மூச்சென்ற நினைப்புற்றேன்!



# பொங்கல் சிந்தனை

## பி.வி.கிரி

உண்மைகள் மலர வேண்டும்
உதவிகள் பெருக வேண்டும்
நன்மைகள் வாழ்வில் சேர
நல்வாழ்த்து கூற வேண்டும்!

தமிழ்மொழி வளர வேண்டும்
தமிழர்நிலை உயர வேண்டும்
அமைதியெங்கும் பரவ வேண்டும்
அன்புவழி செல்ல வேண்டும்!

வன்முறைகள் தொலைய வேண்டும்
வளமெல்லாம் நிறைய வேண்டும்
நன்முறைகள் நாளும் நண்ண
நாமெல்லாம் சேர வேண்டும்!

பெண்கல்வி உயர வேண்டும்
பேதைமை ஒழிய வேண்டும்
உண்மைசேர் நட்பே ஓங்க
உறுதிமொழி ஏற்க வேண்டும்!

# மகிழ்வு தரும் பொங்கல் திருநாள்

புலவர் தமிழ்ப்பித்தன்

பொங்கல் திருநாள் என்றாலே
பொங்கிடும் மகிழ்வு தன்னாலே
கங்குல் விலகும் கதிராலே
கடமை சிறக்கும், செயலாலே

மங்கலம் சேரும், பண்பாலே
மனக்கடல் ஒலிக்கும் அன்பாலே
மங்கையர் மகிழ்வர் தொண்டாலே
மழலையர் மகிழ்வர் கரும்பாலே

இல்லம் சிறக்கும் உழவாலே
இணைகள் மகிழ்வர் உறவாலே
வெல்லம் மணக்கும் நெய்யாலே
விழிகள் மலரும் உணர்வாலே

பொங்கல் அமுதச் சுவையாலே
புன்னகை நிறையும் மண்மேலே
சங்கம் வளர்த்த தமிழாலே
சந்ததம் வாழ்த்தி மகிழ்வோமே.



# பொங்கல் நல்வாழ்த்து

பட்டுக்கோட்டை ராசேந்திரன்

ஊதை. மார்கழிப் பனித்திரை விலக்கி
உதய சூரியன் காட்சிதந்தான் - புதுப்
பாதை தெரிந்தது; தகதக வெனத் தைப்
பாவை இன்று துணைக்கு வந்தாள்!

எங்கள் தமிழ்நிலம் எங்கள் தமிழினம்
எங்கும் பொங்கல் வாழ்த்தொலிகள் - தைப்
பொங்கல் நாளில்நெய் மணக்கும் சர்க்கரைப்
பொங்கல் போலும்தென் பாங்கிசைகள்!

மாடு பிடித்தனர் காளையர்; பாவையர்
மாக்கோலம் இட்டுப் பூவைத்தார் - தமிழ்
நாடு மகிழ்ந்தது; சிறுமியர் வளையல்கள்
நல்லிசை பாடிடக் கும்மிவைத்தார்!

தொல்லை வாழ்க்கை இல்லை நமக்கினி
தோழா தோளொடு தோள்நிற்பாய் - ஓர்
எல்லை இல்லை அன்பினுக் கேநீ
எல்லார்க்கும் இந்நாளில் வாழ்த்துரைப்பாய்!

# நூல் நயம்

### கடல் வீரன் நெல்சன்

ஆசிரியர் : அரக மணிமேகலை
வெளியீடு: மகாசக்தி பதிப்பகம்
16, சுங்குராமத் தெரு,
சென்னை-600 001.

விலை : ரூ.7 பக்கம் : 67

வரலாற்றுப் புகழ்மிக்க கடற் போர்களில் ஈடுபட்டு வெற்றி பெற்ற பிரிட்டிஷ் மாவீரன் லார்டு நெல் சனின் வீர வரலாற்றை இந்நூல் தெரி விக்கிறது.

'பொறியின்மை யார்க்கும் பழி யன்று' என்று எடுத்தோதினார் திரு வள்ளுவர். அங்கத்தில் குறை ஏற்பட்ட போதிலும், அயராது ஆற்றலுடன் விளங்கினார் நெல்சன் என்பது நன்கு விளக்கப்பட்டுள்ளது. கடமையைக் கண்ணாகப் போற்றிய மாவீரன் நெல்சன் - நெப்போலியனை வென்ற செய்தி - சுவையாக விவரிக்கப்பட்டு உள்ளது. நெஞ்சுறுதிக்கு நெல்சன் என்ற சிறப்பையும் அவர் பெற்றுள்ள செய்தி தெளிவாக்கப்பட்டுள்ளது. எளிய இனிய நடை நூலை அணி செய்கிறது.

### மறக்க முடியாத மாபெருந் தலைவர்

ஆசிரியர் :
திருவாரூர் இரா. தியாகராஜன்
வெளியீடு: சாந்தா பதிப்பகம்
5, ஸ்ரீபுரம் 2-ம் தெரு
இராயப்பேட்டை
சென்னை-600 014

விலை : ரூ.15 பக்கம் : 167

பெருந்தலைவர் காமராசர் அவர் களின் சிறப்பியல்புகளின் தொகுப்பு நூல் இது. தொகுப்பாளர் ஒவ்வொரு பிரமுகரையும் நேரிற் சந்தித்து அவர் களின் அனுபவ வார்த்தைகளைச் செவியுற்று, அவற்றைச் சுவை ததும்பும் வகையில் கட்டுரைகளாக்கியுள்ளார். அதாவது குரல் பலருடையது; ஆனால் எழுத்து நூலாசிரியருடையது.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் காமராசர் அவர்களின் அதி உன்னதமான குண நலன்களை எடுத்துச் சொல்கின்றது.

ஏழை எளியவர்களுக்கு இரங்கும் உள்ளம், மாற்றுக் கட்சிக்காரரிடமும் காட்டும் மரியாதை, எளிய வாழ்க்கை - உறுதிபடைத்த நெஞ்சம் - இப்படி பல்வேறு இயல்புகளுக்குச் சொந்தக் காரராக அவர் விளங்கிய செய்தியை இந்நூல் எடுத்துச் சொல்கிறது.

நிகழ்ச்சிகளைப் படிப்பது போல இல்லை - நேரிற் காண்பது போலவே இருக்கிறது. நூலாசிரியர் கையாண்டு உள்ள மேலான நடைதான் அதற்குக் காரணம்; பயனுள்ள நூல் இது.

—தமிழ்ப்பித்தன்

### நீங்களும் நிருபராகலாம்

ஆசிரியர் : பி.வி. கிரி
வெளியீடு: முத்துமணி பதிப்பகம்
8, முத்துகிருஷ்ணன் தெரு,
2-வது தளம்
பாண்டி பஜார்,
சென்னை-600 017

விலை : ரூ.20 பக்கம் : 204

எந்த ஒரு நாடானாலும் சரி; அவ்வந்நாட்டுப் பத்திரிகைகளால் அந் நாடு பெறும் பலன் மிகப் பெரிதாக இருக்கும். சமுதாய நிமிர்வுக்குப் பத் திரிகைகளால் உண்டாகும் பணி மகத் தானது ஆகும். ஒரு பத்திரிகைக்கு, அதன் நிருபர் முதுகெலும்பு போன்ற வராவார். அந்தத் தகுதிக்கு ஒருவர் உயர எத்தகைய தகுதிகளெல்லாம் தேவை என்பதே இந்த நூலுக்கு அடித்தளம்.

பல்வேறு தலைப்புகளின் கீழ் 11 கட்டுரைகள் இந்நூலை அலங்கரிக் கின்றன. நடுத்தர நாளிதழின் வரைபடம்; தமிழ்த் 'தென்றல் திரு.வி.க., கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., தமிழறிஞர் மறைமலையடிகள் போன்றோரின் புகைப்படங்கள், அவர்கள் அந்நாளில் நடத்திய ஏடு களின் படங்கள் எல்லாம்கூட தொகுக் கப்பட்டுள்ளன.

ஒரு பத்திரிகை அலுவலகத்தின் முழுப்பணி என்ன என்பதைத் தெளிவு பட விளக்கியிருக்கிறார் நூலாசிரியர் திரு. பி.வி. கிரி. பிரபல எழுத் தாளர்கள், ஏட்டாளர்கள், நிருபர்கள் ஆகியவர்களையும் பேட்டி கண்டு பத்திரிகைப் பணி - நிருபர் பணி ஆகிய விவரங்களையும் அரும்பாடு பட்டுத் தொகுத்தளித்திருக்கிறார்.

பத்திரிகையுலகில் - அதிலும் குறிப் பாக, நிருபராக ஒளிவீசி உயர நினைப்போருக்கு வழிகாட்டும் நூல் இது; இருப்பினும் அனைவரும் படித் துப் பயன் பெறலாம்.

—இல. இராசேந்திரன்

### தொலைக் காட்சியும் பிறதகவல் துறைகளும்

ஆசிரியர்: வெ. நல்லதம்பி,
வெளியீடு: வள்ளுவன் வெளியீட்டகம்,
81, மூன்றாவது கிழக்குத் தெரு,
திருவான்மியூர்,
சென்னை-600 041.

விலை:ரூ. 15 பக்கம்:109.

மக்கள் தகவல் தொடர்புத் துறைச் சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகி யவை இன்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றன.

ஒரு நாட்டின் சமுதாய வளர்ச்சிக் கும், சீர்திருத்தத்துக்கும் இந்தச் சாத னங்கள் பெருமளவில் பயன்படுகின் றன. இவற்றின் தோற்றம், வளர்ச்சி முதலானவற்றை இத்துறைகளில் அனு பவம்மிக்க இந்நூலாசிரியர் விளக்கி யுள்ளார்.

எடுத்துக்காட்டாக, தொலைக்காட்சி யின் வரலாற்றைக் கூறுவதுடன், நிகழ்ச்சி தயாரிக்கும் விதத்தையும் விளக்கியிருக்கும் பாங்கு பாராட்டத் தக்கது. இதேபோல, வானொலியும், திரைப்படமும் விளக்கப்பட்டுள்ளது. செய்தித்தாள் என்கிறபோது, அதன் பழமையும் புதுமையும் எடுத்துக்காட் டப்படுகின்றன.

பொதுவாக இந்நூல், மேற்கண்ட துறைகளில் ஈடுபட விரும்புவோர்க்கு மிகச் சிறந்த கையேடாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

-பொ. மறைமலை.

### முத்துக்காளத்தி சிந்தனைகள்

ஆசிரியர்: அ. வசந்தகுமார்
விற்பனை உரிமை: பாரி நிலையம்
184, பிராட்வே,
சென்னை-600108

விலை: ரூ. 9. பக்கம்:96.

'நம்பிக்கை எல்லாவற்றுக்கும் மூல வேர்'.

'மனத்தின் ஆற்றல் வெளிப்பட வேண்டுமானால், நமது மனத்தைத் தீய எண்ணங்களிலிருந்து விடுவித்து, நல்ல இலட்சியத்திற்காக, உயர்வான குறிக்கோளுக்காகக் கட்டுப்படுத்த வேண்டும்'

'இலட்சியத்தை அடைய வேண்டுமானால் பயம் என்னும் நோய் போக்கப்பட வேண்டும்'.

-இப்படி வாழ்க்கை வண்டி தடை இல்லாமல் செல்லத்தக்க வகையிலே, சிந்தனை எனும் நல்ல பாதையைத் தந்திருக்கும். திரு. முத்துக்காளத்தியின் சிந்தனையை விளக்கிக் கூறுகிறார் இந்நூல் ஆசிரியர்.

**சென்னை நகரச் சுற்றுலாத் தலங்கள்**

**ஆசிரியர்:அ. ராம்கோபால்**
**வெளியீடு:நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.**
**41-பி., சிட்கோ**
**இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**சென்னை-600 98.**

**விலை: ரூ. 10 பக்கம்:96.**

சென்னை மாநகரின் தோற்றமும் வளர்ச்சியும் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றான சென்னை மாநகரின் சிறப்புகளைக் கூறுவதுடன், அங்குள்ள முக்கியச் சாலைகள், ரயில் பாதைகள், பார்க்க வேண்டிய இடங்கள், தொழிற்சாலைகள் முதலான விவரங்களையும் இந் நூலில் நாம் விரிவாகக் காண முடிகிறது.

பொதுவாகச் சுற்றுலாப் பயணிகளுக்கு இது ஒரு கையேடாகும்.

-பி.வி.ஜி.

**நிழல் தேடும் நெஞ்சங்கள்**

ஆசிரியர்: ஏர்வாடி எஸ்.
இராதாகிருஷ்ணன்
வெளியீடு: சுதா பதிப்பகம்
முத்து முதலித் தெரு
புரசைவாக்கம்
சென்னை-600 007

விலை:15 பக்கம்:136

நிழல் தேடும் நெஞ்சங்கள், தடங்களுக்கு வருந்துகிறோம் என இரண்டு நாடகங்கள், முதலாவது நாடகம் சென்னை வானொலியிலும், இரண்டாவது நாடகம் சென்னைத் தொலைக்காட்சியிலும் ஒலி, ஒளி பரப்பான நாடகங்கள்.

மேடை, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றிற்கு நாடகங்கள் வெவ்வேறு கோணத்திலும், வெவ்வேறு விளக்கங்களுடனும் எழுத வேண்டும். சற்று சிரமமான காரியம்தான், ஆசிரியர் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

இந்நாடகங்களைப் படித்து மகிழலாம்.

**தவறான தடங்கள்**

ஆசிரியர்: ஐசக் அருமைராஜன்
வெளியீடு: கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை-600 003

விலை: ரூ. 26. பக்கம்: 190.

இந்நாவலைப் படிக்கும் போது உண்மைச் சம்பவங்களைப் படிக்கும் உணர்வு ஏற்படுகிறது.

பூஞ்சோலையாய்ப் பூத்துக் குலுங்க வேண்டிய நடுத்தரக் குடும்பம் ஒன்றின் மகிழ்ச்சியை, உயர்வை, கண்ணியத்தை, குடும்பத் தலைவியின் பொறுப்பற்ற செயல்கள் எவ்வாறு சின்னா பின்னப்படுத்திச் சீரழிக்கின்றன என்ற நிஜத்தைக் கூறுகிறது கதை.

பக்கங்களைப் புரட்டப் புரட்ட இந்த நாவலின் அசாதாரணம் நம்மை வியக்க வைக்கிறது. இன்றைய நாவல் வியாபார விதிகளுக்கு முற்றிலும் முரண்பட்ட வித்தியாசமான நாவல்.

ஒரு பெண், அல்லது ஆண் இந்தச் சமுதாயத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற குறைந்தபட்ச நீதியை இந்த நாவல் எடுத்துச் சொல்கிறது.

-என். குமாரசாமி



## வருந்துகிறோம்

'தமிழரசு' அச்சகத்திலும், பின்னர் தமிழரசு அலுவலகத்திலும் கடந்த 15 ஆண்டுக்காலம் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. முகம்மது இஸ்மாயில் அர்ஸத், 1.1.1990 அன்று தமது 35-வது வயதில் திடீரென்க் காலமானார்.

அன்னாரது மறைவுக்குத் 'தமிழரசு' தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## வரப்பெற்றோம்

**கீழ்க்காணும் நூல்கள் மூன்றும் விற்பனை உரிமை: பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600 108. ஒவ்வொன்றும் விலை ரூ.3 பக்கம்:32**

**சிரிக்கவும் கொறிக்கவும்:**

தொகுதிகள்-1,2,3.
ஆசிரியர்: மு. முத்துக்காளத்தி

**திருக்குறள் உவமைக் களஞ்சியம்:**

ஆசிரியர் : பசும்பொற்கிழார்,
வெளியீடு: பாவலர் பதிப்பகம்,
பாளையம்பட்டி - 632 611.

விலை:ரூ.5 பக்கம்:64

**ஸ்ரீ ரமண மகரிஷி:**

**ஆசிரியர் : டாக்டர் சோ.சேசாசலம்**
**வெளியீடு: அநுராகம்,**
**10, கண்ணதாசன் சாலை,**
**தியாகராயநகர்,**
**சென்னை-17,**

**விலை:ரூ.2.50 பக்கம்:32**

**இராமானுசர்:**

**ஆசிரியர் : மனசை நளினா,**
**வெளியீடு: சங்கம்,**
**135, சாந்தி நகர்,**
**குரோம்பேட்டை,**
**சென்னை-600 044.**

**விலை:ரூ.7 பக்கம்:92**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை

அதி / நவீன / பருத்தி / வகைகள்




உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னதத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

DIPR/1766/MS88/HTA

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

